# CURRENT AFFAIRS

## ஏப்ரல் – 2018

We Shine Academy™

# உலக நிகழ்வுகள்

## ஐக்கிய நாடுகளின் அரசியல் விவகாரங்களுக்கான தலைமைப் பதவி – முதல் பெண்மணி

- உலக அமைப்புகளில் உயர்ந்தபட்ச செல்வாக்கு கொண்ட பதவிகளில் ஒன்றான ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரங்களுக்கான தலைமைப் பதவியில் முதல் பெண்மணியாக நியமிக்கப்பட அமெரிக்காவின் நீண்டநாள் வெளிநாட்டுத் தூதரான **ரோஸ்மேரி டி கார்லோ** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## NASA -இன்சைட் திட்டம்

- செவ்வாய் கோளின் உட்பகுதியைப் பற்றி ஆராயவும் அதன் உருவாக்கம் பற்றிய பின்புலங்களைக் கண்டுபிடிக்கவும் **நாசா முதன்முறையாக செவ்வாய்**க்கு ஒரு விண்கலத்தை அனுப்ப இருப்பதாக அறிவித்துள்ளது.

## பெய்டவ் - 3 வழிகாட்டு விண்கலம்

- **சீனா**, இரண்டு இணை (Twin pair) **பெய்டவ் - 3 MEO** வகை விண்கலங்களை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

- சீனா, தன்னுடைய உள்நாட்டு விண்கலமான பெய்டவ் (Compass) விண்கல வழிகாட்டு அமைப்பின் மூன்றாவது மற்றும் கடைசிக் கட்ட விண் செலுத்தலின் (Launching) ஒரு பகுதியாக பெய்டவ் - 3 இணை விண்கலங்களை விண்ணில் செலுத்தியுள்ளது.

## Desert Tiger 5

- **ஐக்கிய அரபு எமீரகம் (United Arab Emirates – UAE) மற்றும் மலேசியா** ஆகிய நாடுகள் இணைந்து துபாயில் "Desert Tiger 5" எனும் இராணுவ கூட்டுப் போர்ப்பயிற்சியை நடத்தியுள்ளன.

- இரு நாடுகளுக்குமிடையில் பரஸ்பரம் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதும், கூட்டு இராணுவ செயல்பாடுகளை மேம்படுத்துவதும் இந்த கூட்டுப் போர்ப்பயிற்சியின் நோக்கங்களாகும்.

## மனித உரிமைகள் மீதான சர்வதேச மாநாடு

- தெற்கு ஆசியாவில் உள்ள தண்டனைகள், விலக்கல்கள் (Impunity) மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சனைகளைக் களைவதற்கு மனித உரிமைகள் மீதான சர்வதேச கருத்தரங்கை (International Conference on Human Rights) **நேபாளம்** விரைவில் நடத்த உள்ளது.

- பாகிஸ்தான், இந்தியா, ஆப்கானிஸ்தான், மலேசியா, பிலிப்பைன்ஸ், இலங்கை, வங்கதேசம் உட்பட 20 நாடுகளைச் சேர்ந்த 50 பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கு

## தியான்காங் - 1

- சீனாவைச் சேர்ந்த கட்டுப்பாட்டை இழந்த தியான்காங் - 1 விண்வெளி ஆய்வகம் புவியின் வளிமண்டலப் பகுதியில் மீண்டும் நுழைந்து உலகின் விண்கல இடுகாட்டுப் பகுதிக்கு அருகில் தென் பசுபிக் பெருங்கடலின் மத்தியப் பகுதியில் தரையிறங்கியுள்ளது.

- தியான்காங்-1 (சொர்க்கலோக அரண்மனை அல்லது பால்வழி அரண்மனை – 1) ஆனத **சீனாவின் முதல் மூல முன்மாதிரி விண்வெளி நிலையம்** அல்லது விண்வெளி ஆய்வகம் ஆகும்.

## 9-வது இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா – முத்தரப்பு சந்திப்பு

- 9வது இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் முத்தரப்பு சந்திப்பு **புதுதில்லியில்** நடந்தது.

- மூன்று நாடுகளும் இந்தியி-பசிபிக் பகுதியில் மேம்படுத்தப்பட்ட இணைப்பு வசதிகளை அதிகரித்திட தொடரந்து ஒத்துழைப்பது என உறுதியேற்றுக் கொண்டுள்ளன.

## 114வது சிந்து நதி நிரந்தர ஆணையக் கூட்டம், டெல்லி

- சிந்துநதி நிரந்தர ஆணையத்தின் 114 வது கூட்டம், டெல்லியில் மார்ச் 29-30 வரை நடைபெற்றது. இக்கூட்டத்தில் **இந்தியா-பாகிஸ்தான் அதிகாரிகள்** பங்கேற்றனர். இந்தியா சார்பில் **சிந்து நதி ஆணையத் தலைவர் பி.கே. சக்சேனா** பங்கேற்றார்.

- 2017 மார்ச் மாதம் சிந்து நதி நிரந்தர ஆணையத்தின் **113-ஆவது சட்டம் பாகிஸ்தானில்** நடைபெற்றது.

## சிந்து நதி நிரந்தர ஆணையம் (1960)

- **இந்தியா, பாகிஸ்தான்** இடையே **1960-ஆம் ஆண்டு சிந்து நதி நிரந்தர ஆணையம்** (Permanent Indus Commission) அமைக்கப்பட்டது. இதில் இவ்விரு நாடுகளுக்கு இடையே பாயும் **பீஸ், ரவி, கட்லெஜ், சிந்து, செனாப் மற்றும் ஜெலும்** ஆகிய **6 நதிகளின் பயன்பாடு தொடர்பாக ஒப்பந்தம்** நிறைவேற்றப்பட்டது.

- **இந்தியா-பங்களாதேஷ் முதலாவது சரக்கு ரயில் போக்குவரத்து – தொடக்கம்**

- இந்தியா – பங்களாதேஷ் நாட்டிற்கு இடையே **முதலாவது சரக்கு ரயில் போக்குவரத்து கொல்கத்தா நகரத்திலிருந்து** தொடங்கப்பட்டுள்ளது. (First container train between India and Bangladesh).

- விண்வெளியில் **"அரோரா விண்வெளி நிலையம்"** (AURORA STATION) நிறுவனம், **சொகுசு விண்வெளி ஹோட்டல்** (Luxury Space Hotel) ஒன்றை கட்ட உள்ளது.

- **"ஓரியன் ஸ்பேன்"** (Orion Span) என்ற விண்வெளி நிறுவனம் இந்த திட்டத்தை மேற்கொள்ளவுள்ளது. **2021ல் கட்டுமான பணிகள் முடிந்து, 2022 இல் மக்கள் பயன்பாட்டுக்கு** வரவுள்ளது.


The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

## உலகளவில் பருத்தி உற்பத்தி - இந்தியா முதலிடம்

- உலகளவில் **பருத்தி உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில்** உள்ளது, என மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையமைச்சர் **புருஷோத்தமன்** ரூபாலா தெரிவித்துள்ளார்.

- **உலக பருத்தி உற்பத்தியில் - முதல் 3 இடங்கள்**
  1. இந்தியா
  2. சீனா
  3. அமெரிக்கா

## சவுதி அரேபியாவில் அமையும் "உலகிலேயே மிகப் பெரிய சூரிய ஒளி மின் திட்டம்"

- **சவுதி அரேபியாவில் உலகிலேயே மிகப் பெரிய சூரிய ஒளி மின் திட்டம்** தொடங்கப்பட உள்ளது. இங்கு ரூ.13 லட்சம் கோடியில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. சவுதி அரேபியாவின் நிதி நிறுவனமும், ஜப்பானின் சாப்ட் பேங்க் குரூப் கார்ப்பரேசன் நிறுவனமும் இணைந்து இதை உருவாக்குகின்றன.

- **உலகின் அதிக வயதானவர் - ஜப்பானின் "மசாஸோ நோனாக்கா"**

- உலகில் வாழ்ந்து வருபவர்களில் அதிக வயதான **ஆணாக ஜப்பான் நாட்டை சேர்ந்த மசாஸோ நோனாக்கா (வயது 112)** என்பவரை கின்னஸ் நிறுவனம் இன்று அங்கீகரீத்துள்ளது.

## நவீன J10 – C சீனா விமான படையில் இணைப்பு

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட, ரேடார் கண்களுக்குப் புலப்படாத அதி நவீன J10-C (Chengdu J-10) போர் விமானங்களை **சீனா தனது விமானப் படை** சேவையில் இணைத்துள்ளது. இந்த விமானங்கள், நடுத்தர மற்றும் தொலைதூர இலக்குகளைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டவை. இதுவும் ஒலியை விட அதிக வேகத்தில் பறக்கக் கூடியது.

## பாகிஸ்தான் ராவல்பிண்டி கிராமத்துக்கு "மலாலா" பெயர் சூட்டல்

- பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணத்தில் இருக்கும் **ராவல்பிண்டி பகுதியில் அமைந்துள்ள கிராமத்துக்கு "மலாலா"** என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது.

## மலாலா யூசுஃப்ஸாய்

- **மலாலா யூசுஃப்ஸாய்க்கு** 2014-ஆம் ஆண்டின் **அமைதிக்கான நோபல் பரிசு இந்தியாவின்** சமூக சேவகர் **கைலாஷ் சத்யார்த்தியுடன்** பகிர்ந்து வழங்கப்பட்டது.

## இந்தியா – மலேசியா இருதரப்பு ராணுவக் கூட்டு பயிற்சி "ஹரிமுவ் சக்தி 2018" – தொடக்கம்

- மலேசியாவின் ஹுலு லாங்கட் மாவட்டத்தில் செங்காய் பெர்டிக் அடர்ந்த காட்டுப்பகுதியில், **இந்தியா மற்றும் மலேசியா** நாடுகள் இடையேயான **இருதரப்பு ராணுவக் கூட்டு பயிற்சி "ஹரிமுவ் சக்தி 2018"** (Harimau Shakti 2018), 2018 **ஏப்ரல் 30 முதல் மே 13 வரை** நடைபெறுகிறது.

## 2018 உலக பத்திரிக்கை சுதந்திர குறியீடு : இந்தியாவுக்கு 138 வது இடம் :

- **2018 உலக பத்திரிக்கை சுதந்திர குறியீட்டு** (World Press Freedom Index 2018) பட்டியலில், **இந்தியா 138வது இடத்தில் உள்ளது.** மொத்தம் 180 நாடுகளில் "எல்லைகள் கடந்த பத்திரிகையாளர் அமைப்பால்" (Reporters Without Borders) இந்த பட்டியல் தொகுக்கப்பட்டுள்ளது.

- **நார்வே, ஸ்வீடன் மற்றும் நெதர்லாந்து** நாடுகள் முறையே **முதல் மூன்று** இடங்களை வகிக்கின்றன.

## 'வாஸ்ப்-104 பி' புதிய "கருப்பு கிரகம்" கண்டுபிடிப்பு

- இங்கிலாந்து கீல் பல்கலைக்கழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் **"நிலக்கரியை விட கருப்பாக இருக்கும் புதிய கிரகம்"** ஒன்றை அமெரிக்காவின் **"ஹெப்ளர் தொலைநோக்கி"** மூலம் கண்டுபிடித்துள்ளனர்.

## 2018 “PEACE MISSION” கூட்டு பயிற்சி:: இந்தியா – பாகிஸ்தான் ராணுவம் பங்கேற்பு

- **ரஷியாவில் உள்ள உரல் மலைப்பகுதியில் 2018 செப்டம்பர்** மாதம் நடைபெறும் (Peace Mission) **பயங்கரவாதத்துக்கு எதிரான பன்னாட்டு கூட்டு பயிற்சியில் இந்தியா, பாகிஸ்தான்** ராணுவ வீரர்கள் பங்கேற்கின்றனர்.

## போவோ மன்றம் - பான்-கி-மூன்

- ஐ.நா. அமைப்பினுடைய முன்னாள் பொதுச் செயலாளரான (UN Secretary General) **பான்-கி-மூன் (Ban ki-moon) ஆசியாவிற்கான போவோ மன்றத்தின் (Boao Forum for Asia) தலைவராக** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- சீன மக்கள் வங்கியின் முன்னாள் ஆளுநரான ஜோவ் ஸியோச்சுவான் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## பாபர் ஏவுகணை – பாகிஸ்தான்

- உள் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட, நீர்மூழ்கி கப்பல்களிலிருந்து ஏவத்தக்க சீர்வேக கப்பல் ஏவுகணையான (Indigenously developed Submarine Launched version of Cruise Missile – SLCM) **பாபர் - 3 ஏவுகணையை** (BABUR Missile) **பாகிஸ்தான்** கடற்படை வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது.

- பாபர்-3 ஏவுகணையானது பல்வேறு வகையான ஆயுதங்களை சுமந்து சென்று விநியோகிக்க வல்லதாகும். இது நீருக்கடியிலான கட்டுப்படுத்தப்பட்ட உந்துதல் அமைப்பை (Underwater controlled propulsion) பயன்படுத்துகின்றது.

## ஹங்கேரி – விக்டர் ஆர்பன்

- அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஹங்கேரி நாட்டின் பிரதமரான விக்டர் ஆர்பன் (Viktor Orban) தொடர்ந்து மூன்றாவது முறையாக மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளார்.

## காமன்வெல்த் அரசுத் தலைவர்கள் சந்திப்பு

- இங்கிலாந்து தலைநகர் **இலண்டனில்** நடைபெற்ற காமன்பெல்த் நாடுகளினுடைய அரசுத் தலைவர்கள் சந்திப்பில் (Commonwealth Heads of Government Meeting – CHOGM) இந்தியப் பிரதமரும் மற்ற காமன்வெல்த் நாடுகளின் பிற 52 அரசுத் தலைவர்களும் பங்கேற்றுள்ளனர்.

- **எகிப்து நாட்டிற்கான இந்தியாவின் தூதராக ராகுல் குல்ஷ்ரேஷ்த்** (Rahul Kulsreshth) நியமிக்கப்பட்டுள்ளார்.

- **துருக்கி நாட்டிற்கான இந்திய தூதராக சஞ்சய் பட்டாச்சாரியா** (Sanjay Bhattacharya) நியமிக்கப்பட்டுள்ளார்.

- **நிகராகுவா நாட்டிற்கான இந்தியாவின் தூதராக ரவி தாபர்** (Ravi Thapar) நியமிக்கப்பட்டுள்ளார்.

- **ஐக்கிய நாடுகளவை, 'ஐ.நா. சாலை பாதுகாப்பு நிதி" (UN Road Safety Trust Fund) என்ற புதிய நிதியத்தை உருவாக்கியுள்ளது.** இதன் தலைமையிடம், ஜெனிவாவிலுள்ள ஐரோப்பியாவிற்கான ஐ.நா. பொருளாதார கமிஷன் (UN Economic Commission for Europe (UNECE)) இல் செயல்படும்.

- **முதல் சர்வதேச நீர், சுற்றுச்சூழல் (International conference on Water, Environment) மாநாடு காத்மாண்டு நகரில் 10-12 ஏப்ரல் 2018 தினங்களில் நடைபெற்றது.**

## மலேசியா -போலி ஆவணங்களுக்கு எதிராக சட்டத்தை செயல்படுத்த ஒப்புக்கொள்கிறது

- மலேசியாவில் தேர்தலுக்கு முன்னதாக போலி செய்திகளை தடை செய்வதற்கான சட்டத்தை ஒப்புக் கொண்டுள்ளது. இந்த சட்டம் மூலம், **"போலி செய்தி"** பரவ செய்பவர்களுக்கு அதிகபட்ச ஆறு ஆண்டு சிறை தண்டனையாக தண்டிக்கப்படுகிறது.

## உலகின் மிகப்பெரிய மிதக்கும் புத்தக கடை

- **"MV லோகோஸ் ஹோப்"** என்றழைக்கப்டும் உலகின் மிகப்பெரிய மிதக்கும் புத்தக அங்காடி என்று கருதப்படுகிறது. கப்பலானது, "அறிவு, உதவி மற்றும் நம்பிக்கை" ஆகியவற்றை அனைவருக்கும் வழங்க மெக்ஸிகோவில் வெராக்ரூஸ் வந்துள்ளது.

# தேசிய நிகழ்வுகள்

## கல்வி சீர்திருத்தங்கள் - அமைச்சரவை அனுமதி

- நாட்டில் பள்ளிக் கல்வியில் பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொள்ள மத்திய கேபினெட் அனுமதியளித்துள்ளது. இச்சீர்திருத்தங்கள், **சர்வ சிக்ஸா அபியான் - 2** திட்டத்தில் செய்யப்பட்ட உள்ளன.

- 1 முதல் 12ஆம் வகுப்பு வரை, **அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA), தேசிய இடைநிலைக் கல்வி இயக்கம் (Rashtriya Madhyamik Shiksha Abhiyan) மற்றும் ஆசிரியர் பயிற்சி ஆகிய அனைத்தும் ஒரே திட்டத்தின் கீழ்** ஒருங்கிணைக்கப்படும்.

- இந்த ஒருங்கிணைக்கப்பட்டத் திட்டம் ஏப்ரல் 1, 2018 முதல் மார்ச் 31, 2020 வரை அமலில் இருக்கும். இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.75,000 கோடி (தற்போதைய அளவை விட 20% கூடுதலாகும்) ஆகும்.

- அரசு, கல்வியில் பின்தங்கிய மாவட்டங்கள், மாற்றுத்திறனாளி மாணவர்கள் மற்றும் பெண்கள் மீது கவனம் செலுத்தும்.

- திறன் பயிற்சி தற்போது 9 முதல் 12ம் வகுப்பு வரை செயல்பாட்டில் உள்ளது. வரும் நாட்களில் இப்பயிற்சி 6ஆம் வகுப்பு முதல் செயல்படுத்தப்படும். இத்திறன் பயிற்சி மாணவர்களின் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- அதிக கட்டணம் வசூலிக்கும் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு சாதாரண நிதி அளவுகளுடன் (Modest Financial means) வட்டியில்லா கல்விக் கடன்கள் வழங்குதலை அதிகரிப்பதற்கும் கேபினேட் அனுமதியளித்துள்ளது.

## அமெரிக்க - இந்தியக் கடற்படைப் பயிற்சி

- இந்தியக் கடற்படையின் தல்வார் வகையைச் சேர்ந்த போர்க்கப்பலான **ஐ.என.எஸ். தர்காஷ் அமெரிக்கக் கடற்படையின் தியோடர் ரூஸ்வெல்ட்** தாக்குதல் வகைக் கப்பலோடு இணைந்து வரவேற்பு மற்றும் பயிற்சி என்ற பெயரிலான கடற்படைப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளது.

## இந்தியா மற்றும் ஜாம்பியாவிற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்

- **நீதித்துறை ஒத்துழைப்பில்** இந்தியா மற்றும் ஜாம்பியாவிற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைக் கையெழுத்திட மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- சமீபத்திய வருடங்களில், **இந்தியா மற்றும் ஜாம்பியாவிற்கு** இடையேயான சமூக, கலாச்சார மற்றும் வர்த்தகத் தொடர்புகள் நம்பிக்கையளிக்கும் வகையில் வளர்ந்து வருகின்றன.

- நீதித்துறை சம்பந்தமான விஷயங்களில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடுவது இரு நாட்டுக்கும் இடையே நட்புறவை அதிகரிப்பதோடு, நீதித்துறை சீர்திருத்தங்களில் புதிய பரிணாமங்களை ஏற்படுத்தும்.

## SC/ST (வன்கொடுமை தடுப்பு) சட்டம்

- **SC/ST (வன்கொடுமை தடுப்பு) சட்டம்** 1989-ஐ தவறாக பயன்படுத்தப்படுதலைத் தடுக்கவும், நேர்மையான அதிகாரிகளைக் காக்கவும் உச்ச நீதிமன்றம் பின்வரும் தீர்ப்புகளை வழங்கியுள்ளது.

- SC/ST சட்டத்தின் கீழ் கைத நடவடிக்கை என்பது **கட்டாயமல்ல மற்றும் உடனடிக் கைது (Automatic arrest)** என்பது நீக்கப்படுகிறது.

- இது அரசு அதிகாரிகள், தனிநபர்கள் ஆகியோரை இச்சட்டத்தின் கீழான நியாயமற்ற கைதிலிருந்து பாதுகாக்கிறது.

- அரசு அதிகாரியை இச்சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் **(DSP)** மற்றும் அதற்கு மேலான நிலையில் உள்ளவரைக் கொண்டு முதல்நிலை விசாரணை நடத்த வேண்டும் எனவும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

- SC/ST (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989ன் கீழ், வழக்குகளில் உடனடிக் கைதைத் தடுக்கும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக சீராய்வு மனு தாக்கல் செய்வதற்கான அறிக்கையை மத்திய சட்ட அமைச்சகம் தயாரித்து வருகிறது.

- **SC/ST வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது**.

## மின்னணு ரசீது நடைமுறை (E-WAY BILL) -2018 ஏப்ரல் 1 முதல் அமல்

- மாநிலங்களுக்கு இடையே ரூ.50 ஆயிரத்துக்கு அதிகம் மதிப்புள்ள சரக்குகளை எடுத்து செல்வதற்கு, **E-WAY BILL** என்னும் மின்னணு ரசீது நடைமுறை **2018 ஏப்ரல் 1 முதல் கட்டாயம் ஆகிறது.**

- E-WAY BILL இணையதளத்தில் இருந்து பெறப்படுகிறது. இந்த ரசீது இன்றி சரக்குகளை ஒரு மாநிலத்தில் இருந்து இன்னொரு மாநிலத்துக்கு எடுத்துச்செல்ல முடியாது.

## தெலங்கானாவில் எந்த ரேஷன் கடையிலும் பொருள் வாங்கும் திட்டம் - ஏப்ரல் 1 முதல் அமல்

- தெலங்கானா மாநிலத்துக்குள் இருக்கும் **எந்த ரேஷன் கடையிலும் அத்தியாவசிய பொருள்களை** பயனாளர்கள் வாங்கிக் கொள்ளும் திட்டம், 2018 ஏப்ரல் 1, முதல் அமல்படுத்தப்படவுள்ளது.

- கிரேட்டர் ஹைதராபாத் பிராந்தியத்தில் உள்ள 1,545 ரேஷன் கடைகளில் 2017 ஜீன் மாதம் 1 ஆம் தேதி சோதனை முறையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

## இராஜஸ்தானில் "தனியார் வாகனங்களுக்கு சுங்க கட்டண விலக்கு"

- இராஜஸ்தான் மாநில நெடுஞ்சாலைகளில் **ஏப்ரல் 1 முதல் தனியார் வானங்களுக்கு சுங்க கட்டம் வசூலிப்பதில் இருந்து விலக்கு** அளிக்கப்படுகிறது.

## மேற்கு வங்க மாநிலத்தில் "ரூபாஸ்ரீ" திருமண திட்டம் - தொடக்கம்

- **மேற்கு வங்கத்தில் ஏழைப் பெண்களின் திருமணத்துக்கு நிதியுதவி** அளிக்கும் "**ரூபாஸ்ரீ**" திட்டத்தை அந்த மாநில அரசு அறிமுகம் செய்துள்ளது. பெண்களுக்கு ரூ.25,000 அவர்களின் திருமணத்துக்கு முன்பு வங்கிக் கணக்குகளில் செலுத்தப்படும்.

## "கன்யாஸ்ரீ" திட்டம்

- மேற்கு வங்க மாநிலத்தில் பள்ளிக்குச் சென்று கல்வி பயில வேண்டியதை ஊக்குவிப்பதும், 18 வயது வரை திருமணம் செய்து வைக்கப்படாமல், படிக்க வைக்க உதவும் "**கன்யாஸ்ரீ" திட்டம்** ஏற்கெனவே அமல்படுத்தப்பட்டு வருகிறது.

## இந்தியாவின் முதல் தேசியப் பூங்கா – ஜிம் கார்பெட் தேசியப் பூங்கா, உத்தராகாண்ட்

- **ஜிம் கார்பெட் தேசியப் பூங்கா** (Jim Corbett National Park) இந்தியாவின் முதல் தேசியப் பூங்கா ஆகும். இது 1936-ல் நிறுவப்பட்டது.

- **உத்தராகாண்ட் மாநிலத்தில்,** மேற்கு இமயமலை அடிவாரத்தில் சுமார் 920.9 ச.கி.மீ பரப்பளவில் இப்பூங்கா அமைந்துள்ளது. முதலில் எய்லி தேசியப் பூங்கா என்றழைக்கப்பட்டுப் பின்னர் புகழ்பெற்ற வேட்டைக்காரரும், இயற்கைப் பாதுகாவலரும், நூலாசிரியருமான **ஜிம் கார்பெட்டின்** பெயர் சூட்டப்பெற்றது

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams

8939 144 344
www.weshineacademy.com

## தூய்மை விமான நிலையமாக – மங்களூரு விமான நிலையம் தேர்வு

- இந்தியாவின் தூய்மையான விமானநிலையமாக **மங்களூர் சர்வதேச விமான நிலையம்** தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## இந்திய இராணுவம் மற்றும் எச்.டி.எ.ஃ.ப்.சி வங்கி – ஒப்பந்தம்

- **இந்திய இராணுவம் மற்றும் எச்.டி.எ.ஃ.ப்.சி வங்கி (HDFC Bank)** இடையே, **பாதுகாப்புத்துறை சம்பளப் பிரிவு** தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் **ஏப்ரல் 3 அன்று** கையெழுத்தாகியுள்ளது.

## WHATSAPP செயலி மூலம் இந்தஸ்சிந்த வங்கியில் அடிப்படை சேவை-அறிமுகம

- **இந்தஸ்சிந்த் வங்கி (Induslnd Bank), WHATSAPP** செயலி மூலம், வாடிக்கையாளர்களுக்கு அடிப்படை வங்கி சேவைகளை வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## மனிதாபிமான உதவி மற்றும் பேரழிவு கூட்டு நிவாரணப்பயிற்சி – Chakravath 2018

- இந்திய கடற்படை-கேரள அரசாங்கத்துடன் ஒருங்கிணைந்து, ஏப்ரல் 5 முதல் 8 வரை, மனிதாபிமான உதவி மற்றும் பேரழிவு கூட்டு நிவாரணப்பயிற்சி (HADR) ‘சக்ரவத் 2018’ என்று பெயரில் (Chakravath 2018), கொச்சி கடற்படைதளத்தில் நடைபெற்றது.

- **HADR: Humanitarian Assistance and Disaster Relief**

## இந்திய விமானப்படையின் போர் பயிற்சி “ககன் சக்தி 2018” – தொடக்கம

- இந்திய விமானப்படை (Indian Air Force), பாகிஸ்தான் மற்றும் சீனா எல்லையில், ககன் சக்தி 2018 (Gagan Shakti) மிகப்பெரிய போர் பயிற்சி நடவடிக்கைகளை நடத்தி வருகிறது.

- இப்பயிற்சிகள் 2018 ஏப்ரல் 10 முதல் 23 வரை நடைபெறுகிறது.

- உள்நாட்டு தயாரிப்பான **"இலகு ரக போர் விமானம் தேஜாஸ்"** (Light Combat Aircraft Tejas) முதல் முறையாக இப்பயிற்சியில் பங்கேற்றுள்ளது.

## குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த – ஆப்பிரிக்க நாடுகளுக்கு சுற்றுப் பயணம்

- ஆப்பிரிக்க நாடுகளான ஈக்குவடோரியல் கினியா, ஸ்வாஸிலாந்து, ஜாம்பியா ஆகிய 3 நாடுகளுக்கு, **குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்,** ஏப்ரல் 7 முதல் மூன்று நாடுகள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

- சுவாசிலாந்தின் "ஆர்டர் ஆப் தி லயன் விருது" பெற்ற ராம்நாத் கோவிந்த்

- சுவாசிலாந்தில் வெளிநாட்டின் முக்கிய பிரமுகர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான **"ஆர்டர் ஆப் தி லயன் விருது"** குடியரசுத் தலைவர் **ராம்நாத் கோவிந்துக்கு** வழங்கப்பட்டது.

- சென்னை, காட்டுப்பள்ளி L&T நிறுவனத்தின் கப்பல் கட்டும் தளத்தில், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதலாவது **"கடற்படை ரோந்துக் கப்பல் ICGS விக்ரம்",** இந்திய கடலோரக் காவல் படையில், ஏப்ரல் 11 அன்று இணைக்கப்பட்டது.

- கடலோரக் **காவல்படையில் இணைக்கப்பட்ட ICGS விக்ரம், மேற்கு பிராந்திய பிரிவில்** சேர்க்கப்பட்டு புதிய மங்களூரை தலைமையிடமாக் கொண்டு ரோந்துப் பணியில் ஈடுபட உள்ளது.

- 'விக்ரம்', 'விஜயா' எனப் பெயரிடப்பட்ட **இரண்டு ரோந்துக் கப்பல்கள்** இங்கு கட்டி முடிக்கப்பட்டு கடந்த சில மாதங்களுக்கு முன்பு கடலோரக் காவல்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

## குஜராத் மாநிலத்தில் அமையும் "உலகின் மிகப்பெரிய சூரிய ஒளி மின் பூங்கா"

- குஜராத் முதலமைச்சர் விஜய் ரூபனி, சமீபத்தில் 5000 **மெகாவாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின் பூங்கா** (Solar Park) ஒன்றை, டோலேரா சிறப்பு முதலீட்டு

மண்டலத்தில் நிறுவ ஒப்புதல் அளித்துள்ளார். இது நிறுவப்படும் போது **“உலகின் மிகப்பெரிய சூரிய ஒளி மின் பூங்கா” வாக** இருக்கும்.

## தென்னிந்தியாவுக்கு இடம்பெயர்ந்த சிந்து சமவெளி மக்கள்: புதிய ஆய்வு தகவல்கள்

- **காரக்பூரில் உள்ள ஐ.ஐ.டி** பேராசிரியர் **அனில் கே.குப்தா** தலைமையில் பல்வேறு கல்வி நிறுவனங்களை சேர்ந்த ஆய்வாளர்கள் அடங்கிய குழு ஆய்வு ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இடங்களில் சிந்து சமவெளி நாகரிகம் தொடர்பாக ஆய்வுகள் செய்தது. அவர்களின் கண்டுபிடிப்புகளை,

- **‘எல்செவியர்’ என்ற சர்வதேச விஞ்ஞான பத்திரிகை** ஏற்றுக் கொண்டுள்ளது. அந்த ஆய்வுக்கட்டுரையில் கூறப்பட்டுள்ள விவரங்கள்:

- சிந்து சமவெளியில் **‘எல் நினோ’ விளைவு காரணமாக, 900 ஆண்டுகளாக வறட்சி** நீடித்தது. அதனால், அப்பகுதி வறண்ட பிரதேசம் ஆனது. அவர்கள் பருவமழை அதிகமாக பெய்யும் **இந்தியாவின் தென்பகுதிக்கும், கிழக்கு பகுதிக்கும்** இடம்பெயர்ந்தனர்.

## ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். 1-ஐ

- ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தின் முதலாம் ஏவுதளத்தில் இருந்து, **ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். 1-ஐ** செயற்கைகோளை ஏந்தியப்படி, **பி.எஸ்.எல்.வி. சி-41 ராக்கெட் ஏப்ரல் 12** அன்று விண்ணில் வெற்றிகரமாக பாய்ந்தது.

- **கடல்சார் ஆராய்ச்சி, எல்லை கண்காணிப்பு** மற்றும் கோட்பாடு வசதி, சாலை போக்குவரத்து மற்றும் வான்வெளி போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது, **பேரிடர் மேலாண்மை** மற்றும் பாதுகாப்பு பயன்பாடுகளுக்கு இந்த **ஐ.ஆர்.என்.எஸ்.எஸ் 1-ஐ** செயற்கைகோள் உதவும்.

## ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் முதல் சுகாதார மையம் - சத்தீஸ்கரில் திறப்பு

- ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழான **முதல் சுகாதார மையத்தை சத்தீஸ்கர் மாநிலம்** பிஜப்பூர் மாவட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி **ஏப்ரல் 14** அன்று தொடங்கி வைத்தார்.

## பாதுகாப்பு திட்டமிடல் குழு "அஜித் தோவல்" தலைமையில் அமைப்பு

- **பாதுகாப்புப் படைகளுக்கான விரிவான திட்டமிடலுக்கு உதவுவதற்காக**, பாதுகாப்பு திட்டமிடல் குழு (Defence Planning Committee) ஒன்றை, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் (NSA) **"அஜித் தோவல்" தலைமையில்**, மத்திய அரசு உருவாக்கியுள்ளது.

## சிறுமிகளுக்கு பாலியல் வன்கொடுமை "மரண தண்டனை" வழங்கும் சட்டம்

- 12 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கு பாலியல் வன்கொடுமை செய்தால் மரண தண்டனை வழங்கும் அவசர சட்டமாக பிறப்பிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைக்கு தூக்கு தண்டனை வழங்கும் அவசர சட்டத்துக்கு குடியரசுத் தலைவர் **ராம்நாத் கோவிந்த் ஒப்புதல்** அளித்துள்ளார். இந்த சட்டம் உடனடியாக அமலுக்கு வருகிறது.

## உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு எதிரான "பதவி நீக்க தீர்மானம்"

- **உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா** அவர்களுக்கு எதிரான **பதவி நீக்க தீர்மான கடிதத்தை, துணை குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடு அவர்களிடம்,** நாடாளுமன்ற மாநிலங்களவையைச் சேர்ந்த 71 **எம்.பி.க்கள் கையெழுத்திட்டுள்ளனர்.**

## இந்தியாவின் சிறந்த கிராமிய பஞ்சாயத்தாக "திகாம்பர்பூர்" கிராமம் தேர்வு

- **மேற்கு வங்கத்தின் "திகாம்பர்பூர்"** கிராமம் பஞ்சாயத்து, **இந்தியாவின் "சிறந்த கிராமிய பஞ்சாயத்தாக" மத்திய அரசின் விருதை** பெற்றுள்ளது. West Bengal's Digambarpur, Best Gram Panchayat.

## திட்டமிட்ட குற்றங்கள் மீது இந்தயா, ஐக்கியப் பேரரசு மற்றும் அயர்லாந்து – புரிந்துணர்வு ஒப்பந்தம்

- மத்திய அமைச்சரவை திட்டமிட்ட குற்றங்கள் தொடர்பான, ஒத்துழைப்பு விவகாரத்தில் இந்தியா, ஐக்கிய பேரரசு மற்றும் வடக்கு அயர்லாந்து ஆகியவற்றுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட ஒப்புதல் அளித்துள்ளது.

- அபாயகரமான திட்டமிட்ட குற்றங்களை சமாளிக்கவும், சர்வதேச குற்றத்தன்மையைக் கட்டுப்படுத்தவும் தகவல்களை பரிமாறவும் இத்திட்டம் உதவும்.

## உயர் லட்சிய மாவட்டங்கள் - நிதி ஆயோக்

- பல்வேறு துறைகளிலுள்ள **49** குறியீடுகளை அடிப்படையாகக் கொண்டு 101 உயர் லட்சிய மாவட்டங்களுக்கான **அடிப்படைத் தரவரிசையை (Base line Ranking) நிதி ஆயோக்** அறிவித்துள்ளது.

- இந்த குறியீடுகள், சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, வேளாண்மை மற்றும் நீர்வளங்கள், நிதியியல் சேர்ப்பு (Financial Inclusion) திறன் மேம்பாடு மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது.

- இந்தத் தொடக்கம் மாநிலம், மாவட்டம் மற்றும் வட்டார அளவிலும் போட்டித்தன்மையை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

- உயர் லட்சிய மாவட்டங்களுக்கான திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்கள் அவற்றின் அதிகப்படியான வளர்ச்சியின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்படுகின்றன. இத்தரவரிசை போட்டித்துவ கூட்டாட்சி முறையின் தூய்மைத் தன்மையை ஊக்குவிக்கவும் அதை ஒரு எடுத்துக்காட்டாக விளக்கவும் உதவுகிறது.

- இத்தரவரிசையின் அடிப்படையில் **ஆந்திரப்பிரதேசத்தின் விஷிய நகரம் 48.13%** மதிப்புகளோடு முதலிடத்திலுள்ளது.

## இடம்பெயர்வு மற்றும் இயக்கக் கூட்டு ஒப்பந்தம்

- **இந்தியா மற்றும் பிரான்ஸ் நாட்டிற்கு இடையேயான இடம்பெயர்வு மற்றும் இயக்கக் கூட்டு ஒப்பந்தத்தில் (Migration and Mobility Partnership Agreement)** கையெழுத்திட மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

- இரு நாடுகளுக்கிடையே மக்களுக்கிடையேயான தொடர்பை மேம்படுத்துவதில் (people-to-people-P2P) முக்கியமான மைல்கல்லாக இந்த ஒப்பந்தம் கருதப்படுகின்றது.

## இந்தியா – ஹெல்லெனிக் ஒப்பந்தம்

- **இந்தியா மற்றும் ஹெல்லெனிக் (Hellenic) நாடுகளுக்கு இடையே புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் துறையில்** ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding – MOU) ஒன்று கையெழுத்திடப்பட்டுள்ளது.

## உலகின் மிகப்பெரிய இரண்டாவது கைபேசி உற்பத்தியாளர்

- **சீனாவிற்கு அடுத்தபடியாக**, வியட்நாமை பின்னுக்குத் தள்ளி **உலகின் இரண்டாவது பெரிய கைபேசி (Mobile Phones) உற்பத்தியாளர் நாடாக இந்தியா** உருவாகியுள்ளது.

## சாஹ்யோக் இயோபிளையியோக் 2018

- **சாஹ்யோக் இயோபிளையியோக் (Sahyog-Hyeoblyeog 2018) எனும்** 2018 **ஆண்டிற்கான இந்தியா மற்றும் தென்கொரியாவிற்கு இடையேயான கடற்கொள்ளை எதிர்ப்பு (Antipiracy), மீட்பு மற்றும் தேடல்** கூட்டுப் போர்ப்பயிற்சி வங்காள விரிகுடாக் கடலில் தமிழ்நாட்டின் சென்னை கடற்கரையில் நடத்தப்பட்டுள்ளது.

## கோபர்தான் யோஜனா

- மத்திய அரசு 2018ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் இறுதியில் ஹரியானா மாநிலத்தின் கர்னால் மாவட்டத்திலிருந்து தேசிய அளவில் கோபர்தான் அல்லது **விவசாயத்தின்**

**கரிம-உயிரி மூலங்களைத் தூண்டுதல் (Galvanising Organic Bio Agro Resources)** எனப் பொருள்படும் மத்திய அரசுத் திட்டத்தை ஆரம்பிக்க இருக்கிறது.

## தூப் திட்டம்

- அதிகரித்து வரும் **வைட்டமின்-D குறைபாடுகளைக் (Vitamin D deficiencies – VDD)** களைவதற்காக குறிப்பாக இளம் மக்களிடையே வைட்டமின் D குறைபாட்டைக் குறைப்பதற்காக இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையமானது **(FSSAI – Food Safety and Standards Authority of India – FSSAI)** வெயில் எனும் திட்டத்தைத் (Project Dhoop) துவங்கியுள்ளது.

### e-FRRO திட்டம்

- மத்திய உள்துறை அமைச்சகமானது **(Union Home Ministry) மின்-வெளிநாட்டினர் பிராந்திய பதிவு அலுவலகம் (e-Foreigners Regional Registration Office/e-FRRO)** எனும் இணைய அடிப்படையிலான பயன்பாட்டைத் தொடங்கியுள்ளது.

- இந்தியாவிற்குப் பயணம் மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பயணிகளுக்கு வேகமான மற்றும் திறனான இசைவுச்சீட்டு தொடர்பான சேவைகளை **(visa-related services)** ஆன்லைனில் வழங்குவதே e-FRRO வின் நோக்கமாகும்.

## முதல் அதிவேக மின் இயந்திரம்

- 12000 குதிரைத் திறன் (Horsepower-HP) கொண்ட இந்தியாவின் முதல் அதிவேக மின் இயந்திரம் **பீகார் மாநிலத்தில் உள்ள மதேபுரா எலெக்ட்ரிக் எஞ்சின் தொழிற்சாலையிலிருந்து (Electric Locomotive Factory)** பிரதமரால் கொடி அசைத்து தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- **இந்தியாவில் தயாரிப்போம் (Make-in-India)** என்ற திட்டத்தின் முதல் பெரிய திட்டமான இத்திட்டம் பிரெஞ்சு நிறுவனமான ஆல்ஸ்டோம் (Alstom) நிறுவனத்துடன் இணைந்து இந்திய ரயில்வே நிறுவனத்தால் மேம்படுத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

## முதல் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு மையம்

- தேசிய சுகாதார பாதுகாப்புத் திட்டமான **ஆயுஷ்மான் பாரத் யோஜனாவின் தொடக்கத்தினை (Ayushman Bharat Yojana – National Health Protection**

**Mission-AB-NHPM)** குறிப்பதற்காக **சத்தீஸ்கர் மாநிலத்தின் பிஜப்பூரில் நாட்டின் முதல் சுகாதாரம் மற்றும் நல் வாழ்வு மையத்தை (Health and Wellness Centre)** பிரதமர் தொடங்கி வைத்துள்ளார்.

- மோடிகேர் (Modicare) என்று அழைக்கப்படும் ஆயுஷ்மான் பாரத் எனும் சுகாதாரக் காப்பீட்டுத் திட்டமானது 2018 ஆம் ஆண்டின் மத்தியப் பொது பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது.

- ஹெபடைடிஸ்-சி வைரஸிற்கான உலக சுகாதார மையத்தின் புதிய சிகிச்சை வழிகாட்டுதல்களின் கீழ், **ஹெபடைடிஸ்-சி வைரஸிற்கான மருந்துப் பொருளாக சோபோஸ்புவிர் (Sofosbuvir)** எனும் மருந்து பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## ஹரிமவ் சக்தி 2018

- **இந்தியா மற்றும் மலேசியாவிற்கு இடையேயான இரு தரப்பு கூட்டுப் போர் பயிற்சியான ஹரிமவ் சக்தி பயிற்சி (HARIMAU SHAKTI) 2018-ஆம் ஆண்டு ஏப்ரல் 30-ஆம் தேதியிலிருந்து மே 13-ஆம் தேதி** வரை இரு நாடுகளுக்கிடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக மலேசியாவின் ஹீலு லாங்கட் (Hulu Langat) பகுதியில் உள்ள ஷாங்காய் பெர்டிக் அடர்வனங்களில் நடைபெற உள்ளது.

- தற்போது முதல்முறையாக இந்தியா மற்றும் மலேசிய இராணுவ வீரர்கள் பங்கேற்கும் இந்த கூட்டுப் போர் பயிற்சியானது மலேசியாவில் நடைபெற உள்ளது.

- வைரஸ் ஹெப்படைடிஸ் நோயானது உலகம் முழுவதும் ஓர் பொது சுகாதாரப் பிரச்சினையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. **இந்தியா 2030-ஆம் ஆண்டிற்குள் கல்லீரல் அழற்சியை முற்றிலும் ஒழிக்க இலக்கினை நிர்ணயித்துள்ளது.**

## இ-சனத்

- மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் **இ-சனத் இணைய வாயிலையும் தேசிய கல்விக் களஞ்சியத்தையும்** ஒருங்கிணைத்துள்ளது.

- இ-சனத் அமைப்பு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு தொடர்புகளற்ற, பணமற்ற மற்றும் காகிதமற்ற ஆவணச் சான்றொப்ப சேவைகளை அளித்து, ஆவணங்களின் நேரடியான சரிபார்ப்பினை மேம்படுத்திட உறுதி பூண்டுள்ளது.

- **இந்த திட்டம் 2023 ஆம் ஆண்டுக்குள் இரண்டு லட்சம் சர்வதேச மாணவர்களுக்கு இந்திய கல்வி முறையை ஊக்குவிக்க எண்ணுகிறது**. மொத்த இடங்களில் 55 சதவிகித இடங்கள் திறன் அடிப்படையில் கட்டணத் தள்ளுபடியின் கீழ் அளிக்கப்படும்.

## தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ்(BCCI)

- மத்திய சட்ட ஆணையம் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தையும் அதனோடு தொடர்புடைய மற்ற கிரிக்கெட் அமைப்புகளையும் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கொண்டு வர பரிந்துரைத்துள்ளது.

  **11வது உலக இந்தி மொழி மாநாடு (World Hindi Conference) 18-20 ஆகஸ்டு 2018 தேதிகளில் மௌரீசியஸ்** நாட்டில் நடைபெறவுள்ளது.

  - முதல் இந்தி மாநாடு 1975 ஜனவரியில் மஹாராஷ்டிரா மாநிலம் நாக்பூர் நகரில் நடைபெற்றது.

- **ஹரியானா மாநிலத்தில், தட்டமை நோய் (Measles and Rubella) தடுப்பூசி திட்டத்தின் விளம்பர தூதுவராக இந்திய துப்பாக்கி சுடுதல் வீரர் மானு பாக்கர்** (Manu Bhaker) நியமிக்கப்பட்டுள்ளார்.

- **“கங்கா ஹரிதீமா யோஜனா” (Ganga Hariteema Yojana)** திட்டத்தை **உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதியநாத் 07.04.2018** அன்று துவக்கி வைத்தார். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி ஆறுகளின் கரையோரப்பகுதிகளில் 1 கி.மீ பரப்பில் மரங்களை நடுவதாகும்.

- **இந்தியாவில் முதல் முறையாக “சமுதாய வானொலி**யை (community radio) **கேரள மாநில அரசு** வரும் ஜீன் 2018 முதல் ஆலப்புழா மாவட்டம் குட்டநாடு பகுதியிலிருந்து செயல்பட துவக்கவுள்ளது. முழுவதும் விவசாய சமுதாயத்திற்கு தேவையான பயனுள்ள தகவல்களை ஒலிபரப்ப இந்த வானொலி நிலையம் அமைக்கப்படவுள்ளது.

## இரட்டை அடுக்கு பஞ்சாயத்து அமைப்பு

- அருணாச்சலப் பிரதேச மாநில சட்டப்பேரவையானது, பஞ்சாயத்து ராஜ் (திருத்த) மசோதா 2018-னை நிறைவேற்றியதன் மூலம், அம்மாநிலத்தின் பஞ்சாயத்து அமைப்பிலிருந்து அஞ்சல் சமிதியை (இடைநிலை அடுக்கு) நீக்கி இரட்டை அடுக்கு பஞ்சாயத்து அமைப்பை மட்டும் ஏற்படுத்தி உள்ளது.

- 73-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 20 லட்சத்தை விடக் குறைவான மக்கள் தொகையை கொண்ட மாநிலங்கள் இடையடுக்கு (Intermediate level) முறையை பஞ்சாயத்து அமைப்பில் கொண்டிருக்கத் தேவையில்லை எனக் கூறுகிறது. அருணாச்சலப்பிரதேசத்தின் மக்கள் தொகை 13.84 லட்சம் ஆகும்.

## BS-VI எரிபொருள் விநியோகம் - முதல் நகரம்

- பெட்ரோல் மற்றும் டீசல் என இரண்டிலும் பாரத் நிலை-VI(Bharat Stage – BS VI) தரநிலை எரிபொருட்களை (Grade fuel) விநியோகிக்கும் **இந்தியாவின் முதல் நகரமாக டெல்லி** உருவாகியுள்ளது.

- **'ஆக்சிடோசின் ஹார்மோன்" (oxytocin hormone) இறக்குமதியை இந்திய அரசு தடை செய்துள்ளது.** பாலூட்டும் விலங்குகளில் இந்த ஹார்மோனின் தவறான பயன்படுத்துதலைத் தடுக்கும் இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

- குறிப்பு: **"அன்பு ஹார்மோன்" (love hormone) என அழைக்கப்படும் 'ஆக்சிடோசின்' ஹார்மோனானது பாலுறவு**, குழந்தை பிறத்தல் மற்றும் பாலூட்டும் நிகழ்வுகளின் போது இயற்கையாகவே வெளிப்படுகிறது.

- **"உத்தம் செயலி" (UTTAM APP): நிலக்கரியின் தரத்தை கண்காணிப்பதற்கான உத்தம் என்னும் செயலியை** மத்திய நிலக்கரித் துறை மற்றும் ரயில்வே அமைச்சர் திரு.பியூஷ் கோயல், தொடங்கி வைத்தார்.

- **உயர்தர மின்சாரத்தால் இயங்கக்கூடிய வாகனங்களை உற்பத்தி செய்வதற்கான '∴பேம் இந்தியா' FAME India (Faster Adoption and Manufacturing of Hybrid & Electric Vehicles – FAME India) திட்டத்தின் முதற்கட்ட அமலாக்கத்திற்கான கால இலக்கை மார்ச் 2018 லிருந்து செப்டம்பர் 2018 ஆக மத்திய அரசு நீட்டித்துள்ளது.** ∴பேம் இந்தியா FAME India திட்டமானது "தேசிய

மின்சார வாகனங்கள் திட்டம் 2020'' என்ற திட்டத்தின் ஒரு அங்கமாக 2015-2016 ஆம் ஆண்டின் நிதியறிக்கையில் அறிவிக்கப்பட்ட திட்டமாகும்.

## ''நன்றி இந்தியா'' பிரச்சாரம் 2018

- ஆன்மீக தலைவர் தலாய் **லாமா இந்தியா வருகை தந்து 60 வது ஆண்டு** குறிக்கும்வகையில், திபெத்தின் நாடுகடத்தப்பட்ட தலாய்லாமா நினைவாக ''நன்றி இந்தியா'' பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளது.

## சொந்தமாக ஒரு வீடு என பொருள்படும் ஸ்வதார் கிரஹ் திட்டம்

- மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் சொந்தமாக ஒரு வீடு என பொருள்படும் ஸ்வதார் கிரஹ் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

## ஸ்வதார் கிரஹ் திட்டம் பற்றி:

- இதன்படி மிகக் கடுமையாக சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்ட பெண்களின் மறுவாழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் கண்ணியத்துடன் வாழ வகை செய்யப்படுகிறது.
- இத்திட்டத்தின்படி தங்குவதற்கு இடம், உணவு, உடை, மருத்துவ வசதி போன்றவற்றுடன் பொருளாதார மற்றும் சமூகப் பாதுகாப்பும் வழங்கப்படுகிறது.
- ஸ்வதார் கிரஹ் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறவிரும்பும் அரசுசாரா அமைப்புகளுக்குச் சில நிபந்தனைகளையும் அமைச்சகம் விதித்துள்ளது.
- **வால்மீகி மற்றும் மஹார் ஆகிய இரு புதிய மொழிகள் கண்டுபிடிக்கப்பட்டன**

## வால்மீகி மற்றும் மஹர் ஆகிய இரண்டு புதிய மொழிகள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

**முக்கிய குறிப்புகள்:**

- இந்த மொழி பேசும் மக்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், மொழிகள் **'அழிவை நெருங்கக்கூடியவை'** என்று வகைப்படுத்தப்படுகின்றன.

- இந்த மொழிகள் ஆந்திரா மற்றும் ஒடிசாவில் பேசப்படுகின்றன.

- **ஐ.ஆர்என்எஸ்எஸ் - II எனும் கண்காணிப்புச் செயற்கைக் கோளினை பிஎஸ்எல்வி – சி41** வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது

- இஸ்ரோவின் துருவ செயற்கைக்கோள் செலுத்து வாகனம் பிஎஸ்எல்வி – சி41 தனது 43-வது பாய்ச்சலில் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி மையத்திலிருந்து 1425 கிலோ கிராம் எடையுள்ள ஐஆர்என்எஸ்எஸ் - II கண்காணிப்புச் செயற்கைக் கோளினை வெற்றிகரமாகச் செலுத்தியது.

# தமிழக நிகழ்வுகள்

- 2018 முழுவதும், உலக தரத்திலான, **STAINLESS STEEL - மூலம் "ரயில் - 18"** திட்டத்திற்கான நவீன பெட்டிகள் தயாரிக்கும் பணி துவங்கியுள்ளது. 2020 இல், **"ரயில் - 20" திட்டத்திற்கு, முழுவதும் அலுமினியத்தாலான,** உலகத்தரத்தில் ரயில் பெட்டிகள் தயாரிக்கப்பட உள்ளன.

- மாணவர் சேர்க்கை விகிதம் இந்திய அளவில் சராசரியாக **25.2 சதவீதமாகும். தமிழகம் 46.9 சதவீதத்தை** எட்டி முதன்மை நிலையைப் பெற்றுள்ளது.

- **அம்மா "வை-பை" மண்டலம் திட்டம் - தொடங்கிவைப்பு**

- **சென்னை மெரினா கடற்கரை, திருச்சி, மதுரை, சேலம், கோவை** ஆகிய பேருந்து நிலையங்களில் **"அம்மா 'வை-பை' மண்டலம்" (Amma WI-FI Zones)** அமைக்கப்பட்டுள்ளது.

- **2018 ஆம் ஆண்டிற்கான தேசிய கல்வி நிறுவனங்களின் தரவரிசை கட்டமைப்பின் (NRF)** பட்டியலில், **அண்ணா பல்கலைக்கழகம்** ஒட்டுமொத்தப் பிரிவில் **10-வது இடத்தையும்,** பல்கலைக்கழகங்களின் பிரிவல் **4-வது இடத்தையும்,** பொறியியல் பிரிவில் **8-வது இடத்தையும்** பெற்றுள்ளது.

- **"உழவன் செயலி"** : தமிழக அரசின் **வேளாண் துறையின் செயல்பாடுகள், தகவல்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு விரைவில் சென்றடைய, 'உழவன்'** என்ற அலைபேசி செயலி தமிழ், ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டு உள்ளது. இதை, 'ஆன்ட்ராய்டு' அலைபேசியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அரசின் வேளாண்

மானியத் திட்டங்கள், பயிர் காப்பீடு, உரம், விதை இருப்பு அறிதல், வேளாண் இயந்திரங்கள் வாடகை மையங்கள், விளை பொருட்களின் சந்தை விலை, வானிலை அடிப்படையில் வேளாண் அறிவுரை பெறுதல், போன்றவற்றை இந்த செயலியின் மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

## பல்லாவரத்தில் “படகு வடிவிலான முதுமக்கள் தாழி” கண்டெடுப்பு

- **சென்னை பல்லாவரம், ஜமீன்பல்லாவரம்** மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் கற்கால மனிதர்கள் வாழ்ந்ததற்காக பல ஆதாரங்கள் உள்ளன.

- கற்கால மனிதர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள் கண்டு எடுக்கப்பட்டன. **பல்லாவரம் பகுதியில் 12 கால்கள் கொண்ட படகு வடிவிலான முதுமக்கள் தாழி கண்டு** எடுக்கப்பட்டுள்ளது. இது கி.மு. **300 ஆண்டுகளுக்கு முந்தைய நினைவு சின்னம்** என்று தொல்லியல் துறை அறிவித்துள்ளது.

## காசநோய் கண்டறியும் “நடமாடும் மருத்துவ வாகனம்” தொடங்கி வைப்பு

- தாம்பரம் சானடோரியம் **அரசு காச நோய் மருத்துவமனையில் பன்மருந்து எதிர்ப்பு காசநோய்க்கான குறுகிய சிகிச்சை** முறை அறிமுக விழா மற்றும் காசநோயைக் கண்டறிவதற்கான எக்ஸ்ரே கருவியுடன் கூடிய **“நடமாடும் மருத்துவ வாகனத்தின் செயல்பாடு” ஏப்ரல் 17** அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

## முன்பதிவில்லா ரெயில் டிக்கெட் பெற புதிய செயலி – அறிமுகம்

- முன்பதிவில்லா ரெயில் டிக்கெட் பெற புதிய செயலி தெற்கு ரெயில்வே முழுவதும் **2018 ஏப்ரல் 14** முதல் அமல்படுத்தப்படுகிறது. இதற்கு **‘UDS ON MOBILE’ (செல்போனில் முன்பதிவில்லா டிக்கெட் வழங்கும் முறை)** என்று பெயர் சூட்டப்பட்டது.

## ஊட்டியில் “டூரிஸ்ட் போலீஸ்” அறிமுகம்

- ஊட்டியில், கோடை சீசனுக்கு வரும் சுற்றுலா பயணியருக்கு உதவும் வகையில் **“டூரிஸ்ட் போலீஸ்”என்ற அமைப்பு, முதல் முறையாக** அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள், சுற்றுலா பயணிருக்கு உதவியாக இருப்பர்.

## சென்னை-பிரஸல்ஸ் இடையே "நட்புறவு" ஒப்பந்தம்"

- சென்னை மாநகராட்சி மற்றும் **பெல்ஜியம் நாட்டின் பிரஸ்சல்ஸ் தலைநகர்** இடையே **"நட்புறவு ஒப்பந்தம்" ஒன்று, ஏப்ரல் 19** அன்று செய்து கொள்ளப்பட்டுள்ளது.

- இரு பெருநகரங்களுக்கு இடையேயான **நட்புறவு, ஜனநாயகம், மனிதநேயம், மனித உரிமைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பொதுவான இலக்குகள், பொதுவான வளர்ச்சித் திட்டங்கள்** தொடர்பாக இந்த நட்புறவு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

## சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் "வன உயிரின விளக்க மையம்" அமைப்பு

- ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் **வனம், வன உயிரினம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த** ரூ.3 கோடி செலவில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய **"வன உயிரின விளக்க மையம்"** அமைக்கப்பட்டு வருகிறது.

- தேசிய புலிகள் காப்பக விதிகளின்படி புலிகள், யானைகள் உள்ளிட்ட விலங்குகளைப் பாதுகாக்கவும், வனத்தை மேம்படுத்தவும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த இம்மையம் அமைக்கப்படுகிறது.

- நாயக்கர் காலத்தில் இருந்த ஒரு அரிய நடன குழு மற்றும் சோழர் காலத்தில் ஒரு பொறிக்கப்பட்ட தூண் ஆகியவற்றின் அடையாளத்தினை திருச்சியில் கிள்ளியூர் அருகே பத்தலபேட்டையில் தனியாகவுள்ள குளத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- **'அனிதா சாட்':** திருச்சியை சேர்ந்த மாணவி **வில்லட் ஓவியா** புவி **வெப்பமயமாதலின் காரணமாக எந்த அளவிற்கு மாசுபட்டுள்ளது** என்பதை கண்டறிய **'அனிதா சாட்'** என்ற புதிய செயற்கைக் கோளை தயாரித்துள்ளார்.

- **கூட்டுப்பயிற்சிக்காக சென்னை வந்த கொரிய கப்பல் 'படாரோ'** : இந்திய கடலோரக் காவல் படை பல்வேறு நாடுகளின் கடலோரக் காவல்படையுடன் கூட்டுப் பயிற்சியில் அவ்வப்போது ஈடுபடுவது வழக்கம். இந்த நிலையில் **கொரிய கப்பல் படாரோ சென்னை துறைமுகத்துக்கு 02.04.2018** அன்று வந்தடைந்தது.

- **29-வது சாலை பாதுகாப்பு வாரத்தின் (Road Safety Week)** அனுசரிப்பு தமிழகம் முழுவதும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியோடு இணைந்து **ஏப்ரல் 23-ஆம்**

**தேதி முதல் 30-ஆம் தேதி வரை** நடைபெற்றுள்ளது.

- 2018-ஆம் ஆண்டிற்கான சாலை பாதுகாப்பு வாரத்தின் **கருப்பொருள் 'சதக் சுரக்ஷா – ஜீவன் ரக்ஷா" (Sadak Suraksha – Jeevan Raksha)** என்பதாகும்.

- **மண்டல இணைப்புகள் (Regional Connectivity) வழங்குதல் வரிசையில், 7 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சென்னை-சேலம்** விமானப் போக்குவரத்தை முதலமைச்சர் கொடியசைத்துக் தொடங்கி வைத்தார்.

- உடான் திட்டத்தின் மண்டல இணைப்புத் திட்டத்தின் கீழ் இந்த விமான சேவை தொடரும்.

# விளையாட்டு நிகழ்வுகள்

- ஜெர்மன் நாட்டவரும், நடப்பில் ஸ்குடெரியா பெராரி (Scuderia Ferrari) நிறுவனத்தின் பார்முலா ஒன் கார் பந்தய ஓட்டுனருமான **செபாஸ்டின் வெட்டல்** ஆஸ்திரேலியா நாட்டின் மெல்போர்ன் நகரில் நடைபெற்ற 2018 ஆம் ஆண்டிற்கான **பார்முலா ஒன் ஆஸ்திரேலியன் கிராண்ட் பிரிக்ஸ்** பந்தயப் போட்டியில் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார்.

## ISSF ஜீனியர் உலகக் கோப்பை

- **ஒன்பது தங்கம், ஐந்து வெள்ளி, எட்டு வெண்கலம் என மொத்தம் 22 பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்து இந்தியா ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்று வந்த ISSF** ஜீனியர் உலகக் கோப்பைப் போட்டியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

## உலகின் முதல்நிலை பூப்பந்தாட்ட வீரர்

- **கிடாம்பி ஸ்ரீகாந்த்** உலகின் முதல்நிலை பூப்பந்தாட்ட வீரர் என்ற தரவரிசையில் முதல் இந்திய ஆண் வீரராக இடம்பிடித்துள்ளார்.

## 2018 மியாமி ஓபன்

- அமெரிக்காவின் மியாமி நகரில் நடைபெற்ற **மியாமி ஓபன்** போட்டியில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த **வீரரான ஜான் இஸ்னெர் (John Isner) ஜெர்மன்** நாட்டைச்

சேர்ந்த **அலெக்ஸாண்டர் ஜ்வெரேவ் - வினை (Alexander Zverev)** விழ்த்தி முதல் முறையாக மியாமி ஒபன் பட்டத்தை வென்றுள்ளார்.

## சந்தோஷ் டிராபி

- கொல்கத்தா நகரின் சால்ட் லேக் கால்பந்து விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற போட்டியில் **கேரள கால்பந்து அணியானது 6-ஆவது** முறையாக சந்தோஷ் கால்பந்து டிராபினை வென்றுள்ளது.

## காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் 2018

- **21-வது காமன்வெல்த் போட்டிகள் (Commonwealth Games)** அண்மையில் **ஆஸ்திரேலியா நாட்டின் கோல்டுகோஸ்ட் நகரில் (Gold Coast)** நடைபெற்று முடிந்தது.
- இந்த 21-வது காமன்வெல்த் போட்டியில் மொத்தம் **275 தங்கப் பதக்கங்களுக்கு 71 நாடுகளைச் சேர்ந்த 4500க்கும் அதிகமான தடகள வீரரர்கள்** போட்டியிட்டனர்.
- ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பதக்க போட்டிகளை ஒரே எண்ணிக்கையில் கொண்ட முதல் பெரும் அளவிலான பன்-விளையாட்டு போட்டி (Major multi-sport event) இதுவேயாகும்.
- இந்த காமன்வெல்த் போட்டிக்கு 227 வீரர்களைக் கொண்ட அணியை இந்தியா அனுப்பி வைத்தது.
- இந்த காமன்வெல்த் போட்டியின் துவக்க விழா கொண்டாட்டத்தில் **இந்தியக் கொடியை பாட்மிண்டன் வீராங்கனையான பி.வி.சிந்து ஏந்திச் சென்றார் (flag-bearer).**
- **இந்த காமன்வெல்த் போட்டியல் 26 தங்கம்,20 வெள்ளி 20 வெண்கலம் என மொத்தம் 66 பதக்கங்களை வென்று இந்தியா பதக்கப் பட்டியலில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.**
- 80 தங்கம், 99 வெள்ளி, 59 வெண்கலம் என மொத்தம் 198 பதக்கங்களை வென்று **ஆஸ்திரேலியா பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப்** பிடித்துள்ளது.

- 45 தங்கம், 45 வெள்ளி, 46 வெண்கலம் என மொத்தம் 136 பதக்கங்களை வென்று இங்கிலாந்து பதக்கப் பட்டியலில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

- தங்கப் பதக்கம் வென்றவர்கள் - விளையாடடுப் போட்டிகள்

| வீரரின் பெயர் | விளையாட்டு |
|---|---|
| சாய்னா நேவால் | பெண்கள் ஒற்றையர் பாட்மிண்டன் போட்டி |
| விகாஸ் கிருஷ்ணா | குத்துச் சண்டை – 75 கிலோ எடைப் பிரிவு |
| மணிகா | - பெண்களுக்கான ஒற்றையர் டேபுள் டென்னிஸ் போட்டி<br>- காமன்வெல்த்தில் டேபுள் டென்னிஸ் போட்டி போட்டியில் தங்கம் வெல்லும் முதல் இந்தியப் பெண் இவராவார். |
| வினேஷ் போகாட் | மல்யுத்தம் - மகளிர் ப்ரீ ஸ்டைல் 50 கிலோ நார்டிக் போட்டி |
| நீரஜ் சோப்ரா | - ஈட்டி எறிதல்<br>- காமன்வெல்த் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றுள்ள முதல் இந்திய ஈட்டி எறிதல் வீரர் இவராவார். |
| கவுரல் சோவங்கி | குத்துச் சண்டை – 52 கிலோ எடைப் பிரவு |
| சுமித் மாலிக் | மல்யுத்தம் - ஆண்களுக்கான பீரிஸ்டைல் 125 கிலோ எடைப் பிரிவு |
| சஞ்சீவ் ராஜ்புத் | துப்பாக்கிச் சுடுதல் - 50 மீட்டர் ரைபிள் 3 நிலை சுடுதல் போட்டி (3 Position shooting) |
| M.C. மேரிகாம் | -குத்துச் சண்டை – 45 முதல் 48 கிலோ வரையிலான எடைப் பிரிவு<br>- மேரிகோம் தன்னுடைய முதல் காமன்வெல்த் போட்டியான இப்போட்டியில் தங்கம் வென்றுள்ளாா. |
| பஜ்ரங் பூனியா | மல்யுத்தம் - பீரி ஸ்டைல் 65 கிலோ எடைப் பிரிவு |
| தேஜஸ்வினி சவந்த் | துப்பாக்கி சுடுதல் - 50 மீட்டா் ரைபிள் சுடுதல் போட்டி |
| அனிஷ் பன்வாலா | - துப்பாக்கி சுடுதல் - 25 மீட்டர் விரைவு பிஸ்டல் சுடுதல் போட்டி<br>- காமன்வெல்த் போட்டியின் தங்கம் |

| | |
|---|---|
| | வென்ற இளைய வீரர் இவராவார். |
| **சுஷில் குமார்** | - மல்யுத்தம – ஆண்களுக்கான பீரி ஸ்டைல் 74 கிலோ எடைப் பிரிவு<br>- இவர் தனது மூன்றாவது தொடர்ச்சியான காமன்வெல்த் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார். |
| **ராகுல் அவார்** | மல்யுத்தம் ஆண்களுக்கான பீரி ஸ்டைல் 57 கிலோ எடைப்பிரிவு |
| **ஸ்ரேயாஸி சிங்** | துப்பாக்கி சுடுதல் டபுள் டிராப் மகளிர் துப்பாக்கி சுடுதல் |
| **ஹீனா சித்து** | துப்பாக்கி சுடுதல் 25 மீட்டர் பிஸ்டல் சுடுதல் போட்டி |
| **ஜித்து ராய்** | துப்பாக்கி சுடுதல் 10 மீட்டர் ஆண்களுக்கான ஏர் பிஸ்டல் போட்டி |
| **டினு பெக்கர்** | துப்பாக்கி சுடுதல் - பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டல் போட்டி |
| **பூனம் யாதவ்** | பளு தூக்குதல் - பெண்களுக்கான 69 கிலோ எடைப்பிரிவு |
| **வெங்கட் ராகுல் ரகாலா** | பளுதூக்குதல் - ஆண்களுக்கான 85 கிலோ எடைப்பிரிவு |
| **சதீஸ்குமார் சிவலிங்கம்** | பளுதூக்குதல் - ஆண்களுக்கான 77 கிலோ எடைப்பிரிவு |
| **மீராபாய் சானு** | பளுதூக்குதல் - பெண்களுக்கான 48 கிலோ எடைப்பிரிவு |

- இந்தியாவின் ஆண்கள் டேபுள் டென்னிஸ் அணி நைஜீரியாவை வீழ்த்தி தங்கம் வென்றுள்ளது.

- பெண்கள் டேபுள் டென்னிஸ் போட்டியில் **இந்திய டேபுள் டென்னிஸ் மகளிர் அணி முதல் முறையாக தங்கம் வென்றுள்ளது.**

- சத்விக் ரன்கி ரெட்டி மற்றும் அஸ்வினி பொன்னப்பா ஆகியோர் அடங்கிய கலப்பு இரட்டையர் பாட்மிண்டன் அணி இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக காமன்வெல்த் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்றுள்ளது.

## 2018 மான்ட்கார்லோ டென்னிஸ்: இரபெல் நடால் 'சாம்பியன்'

- **மொனாக்கோவில்** நடைபெற்ற, **மான்ட்கார்லோ மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ்** போட்டியின் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில், **ஸ்பெயின் நாட்டின் ரபெல் நடால்,** 6-3, 6-2 என்ற நேர் செட் கணக்கில் ஜப்பான் நாட்டின் நிஷிகோரியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார்.

## 2018 பார்சிலோனோ ஓபன் டென்னிஸ் "ர.ஃபேல் நடால்" சாம்பியன்

- **2018 பார்சிலோனா ஓபன் டென்னிஸ்** தொடரின் இறுதி போட்டியில் **ஸ்பெயின் நாட்டு வீரர் ர.ஃபேல் நடால்** கிரீக் நாட்டை சேர்ந்த ஸ்டெபனோஸ் டிட்சிபாசை 6-2, 6-1 என்ற நேர்செட் கணக்கில் வென்று "**சாம்பியன் பட்டம்**" வென்றார்.

## அதிக பந்து வீசிய வேகப்பந்து வீச்சாளர் - ஜேம்ஸ் ஆண்டர்சன்

- இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் **ஜேம்ஸ் ஆண்டர்சன்** டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் **அதிக பந்து வீசிய வேகப்பந்து வீச்சாளர்** என்ற **சாதனையை** படைத்தார். இவர் 136 **டெஸ்ட்** போட்டிகளில் பங்கேற்று 30 ஆயிரத்து 74 பந்துகள் வீசியுள்ளார். இந்த வகையில் **வெஸ்ட் இண்டீஸ் அணியின் கார்ட்னி வால்ஸ் (30019 பந்து) சாதனையை** முறியடித்துள்ளார்.

- **அதிக ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி (192) – மிதாலி ராஜ் சாதனை**

- அதிக **ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் (192 போட்டிகள்)** விளையாடிய வீராங்கனை என்ற சாதனை படைத்துள்ளார். **இந்திய மகளிர் கிரிக்கெட் அணி கேப்டன் மிதாலி ராஜ்.**

- இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வரும் **இங்கிலாந்து** பெண்கள் அணிக்கெதிராக, மிதாலி ராஜ் தனது 192-வது ஒருநாள் போட்டியை விளையாடினார்.

## 2018 உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி : ஷாஸார் ரிஸ்வி – வெள்ளிப் பதக்கம்

- **தென் கொரியாவின் சாங்வோன் நகரில்** நடைபெறும், **2018 உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் ஷாஸார் ரிஸ்வி** ஆடவருக்கான 10 மீ ஏர் பிஸ்டல் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

- **இன்ஸ்டாகிரம் "Most Engaged Account" விருது பெறும் - விராட் கோலி**

- இந்திய கிரிக்கெட் அணி **கேப்டன் விராட் கோலிக்கு 2017** ஆம் ஆண்டின் **இன்ஸ்டாகிராம் நிறுவனத்தின் "Most Engaged Account"**என்ற விருது வழங்கப்பட்டுள்ளது.

# வர்த்தக நிகழ்வுகள்

## பிட்காயினுக்கு தடை விதித்தத ரிசர்வ் வங்கி: சொந்தமாக டிஜிட்டல் கரன்சி வெளியிடத் திட்டம்

- பிட்காயின் உள்ளிட்ட கிரிப்டோ கரன்சிகளுக்கு தடை விதித்துள்ள ரிசர்வ் வங்கி சொந்தமாக டிஜிட்டல் கரன்சியை அறிமுகப்படுத்துவதற்கான சாத்தியங்களை ஆராய்வோம் எனத் தெரிவித்துள்ளது.

- வங்கிகள் உட்பட **ரிசர்வ் வங்கியின் ஒழுங்குமுறையின் கீழ் செயல்படும் எந்த அமைப்புகளும் கிரிப்டோ கரன்சி சார்ந்த சேவைகளை வழங்கக்கூடாது** என ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது.

- கிரிப்டோ கரன்ஸி போன்ற தொழில்நுட்ப வளர்ச்சிகளால் நிதி அமைப்பின் திறன் மற்றும் நிதி அமைப்பில் அனைவரையும் உள்ளடக்குதல் போன்றவை அதிகரிக்கும் என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

## சர்க்கரை வரி இங்கிலாந்தில் நடைமுறைக்கு வருகிறது

- சர்க்கரை வரி இங்கிலாந்தில் மென்மையான பான உற்பத்தியாளர்களிடையே ஒரு வரிவிதிப்பை அமல்படுத்தியது.
- **வரி மூலம் பணம் கல்வி துறைக்குச் செல்லும்.**

- இந்த நடவடிக்கை குழந்தை பருவத்தில் உடல் பருமனை சமாளிக்க உதவும் நோக்கத்தை கொண்டுள்ளது.

## பாஸ்பரஸ் பென்டாக்சைடு

- உள்நாட்டு உற்பத்தியாளர்களை மலிவான சரக்குகளிலிருந்து காப்பாற்ற சீனாவைச் சேர்ந்து **பாஸ்பரஸ் பென்டாக்சைடை இறக்குமதி** செய்வதற்கு அரசாங்கம் விதிமீறல் கடனை சுமத்தியுள்ளது.

**முக்கிய குறிப்புகள்:**

- பாஸ்பரஸ் பென்டாக்சைடு **ஒரு சக்தி வாய்ந்த உட்சுரப்பணு மற்றும் நீரிழப்பு ஏஜெண்டாகப்** பயன்படுத்தப்படுகிறது. இது இரசாயனத் தொழிற்துறையில் ஒரு பயனள்ள கட்டிடத் தொகுதி மற்றும் அதிரடி ஆகும்.
- பாஸ்பரஸ் பென்டாக்சைடு எரியக்கூடியது அல்ல.

## FAME திட்டம்

- **வேகமான ஏற்றுதல் மற்றும் உற்பத்தி (கலப்பின) மற்றும் மின்சார வாகனங்கள் (FAME – Faster Adoption and Manufacturing of (Hybrid) and Electric Vehicles) திட்டத்தை 2018 செப்டம்பர் 30 வரை** ஆறு மாதங்களுக்கு அல்லது திட்டத்தின் இரண்டாம் கட்டம் ஏற்றுக்கொள்ளும் காலம் வரை அதன் பணியை நீட்டிக்க முடிவு செய்துள்ளது.

## FAME இந்தியா திட்டம் பற்றி:

- **2015 ஆம் ஆண்டில் இந்தியாவில் (Faster Adoption and Manufacturing of (Hybrid) and Electric Vehicles (FAME) scheme)** மூலம் சுற்றுசுழலை பாதுகாக்க **மின் வாகனங்கள் உற்பத்தியை** ஊக்குவிக்க ஒரு நோக்கத்துடன் அரசாங்கம் மூலம் தொடங்கப்பட்டது.

## குரு கோவிந்த சிங்கின் 350வது பிறந்த நாள் விழா – நாணயங்கள் வெளியீடு

- பத்தாவது மற்றும் கடைசி சீக்கிய குருவான குரு கோவிந்த சிங்கின் 350வது பிறந்த தின விழாவை சிறப்பிப்பதற்காக இந்திய ரிசர்வ் 350 ரூபாய் மதிப்பிலான நாணயம் ஒன்றை வெளியிட உள்ளது.

- 35 கிராம் எடை கொண்ட இந்த நாணயம், 50 சதவிகிதம் வெள்ளியையும், 40 சதவிகிதம் தாமிரத்தையும், 5 சதவிகிதம் நிக்கலையும், 5 சதவிகிதம் துத்தநாகத்தையும் கொண்டிருக்கும்.

## ஐசிஐசிஐ வங்கி மீதான அபராதம் - இந்திய ரிசர்வ் வங்கி

- இந்திய ரிசர்வ் வங்கி, அதனால் அளிக்கப்பட்ட நெறி முறைகளுக்கு இணக்கம் காட்டவில்லையென்னு ஐசிஐசிஐ வங்கியின் மீது ரூபாய் 58.9 கோடி அளவிற்கு அபராதம் விதித்துள்ளது.

- 1949ம் ஆண்டின் வங்கி ஒழுங்குமுறைச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் இந்திய ரிசர்வ் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள் படி இந்த அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது.

## இந்தியாவின் பங்களிப்பு அதிகரிப்பு

- கிழக்கின் அருகே உள்ள பாலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிவாரண மற்றும் பணிகள் முகமையின் (United Nations Relief and Works Agenc for Palestine Refugees in the Near East – UNRWA) உடனே வேண்டுகோளுக்குப் பதில் தரும் விதத்தில் இந்திய அரசு தனது வருடாந்திரப் பங்களிப்பை 2018-19ம் ஆண்டில் இருந்து மூன்று வருடங்களுக்கு 1.25 மில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவிலிருந்து 5 மில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது.

## ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியம் மற்றும் நகர கம்போஸ்ட் திட்டம்

- பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியம் மற்றும் நகர கம்போஸ்ட் திட்டம் ஆகிய இரண்டு

திட்டங்களும் 12வது நிதியாண்டைத் தாண்டி 2019-2020 வரை தொடர அனுமதி வழங்கியுள்ளது.

- இந்த முன்மொழிவு மத்திய உரத்துறையால் முன்னனுப்பப்பட்டது (Forwarded). இவ்விரு திட்டங்களையும் 2019-2020 வரை தொடர தேவைப்படும் செலவினத் தொகை ரூ.61,972 கோடியாகும்.

- இவ்விருத் திட்டங்களையும் தொடர்ந்து செயல்படுத்துவது என்பது விவசாயங்களுக்கு பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் ஆகியவை நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாடுடைய விலையில் (Statutory Controlled Prices) தேவையான அளவில் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்யும்.

## இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம்

- **இந்தியா மற்றும் ஈரான்** இடையே வருமானம் மீதான வரிகள் தொடர்பாக வரி ஏய்ப்புத் தடுப்பு (Prevention of Fiscal Evasion) மற்றும் **இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பிற்கான** (Avoidance of Double Taxation) ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

- இந்த ஒப்பந்தமானது பரஸ்பரம் இரு நாடுகளுக்கிடையே முதலீட்டுப் போக்கை (flow of investment) அதிகரிப்பதோடு இரட்டை வரி விதிப்பைத் தடுப்பதற்காக இரு நாடுகளுக்கிடையே தொழில்நுட்பம் மற்றும் வல்லுநர்களின் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும்.

## மின்-வழி இரசீதுகள் (E-Way Bill)

- சரக்கு மற்றும் சேவை வரிக் குழுவினுடைய (Goods and Service Tax council-GST Council) முந்தைய முடிவுகளின் படி மாநிலங்களுக்கிடையேயான பொருட்களின் வர்த்தக இயக்கத்திற்கு (Inter-State movement of goods) மின்-வழி இரசீது அமைப்பானது (e-way Bill System) நாடு முழுவதும் 2018 ஆம் ஆண்டு எப்ரல்-1 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

## SIDBI

- சிறு தொழில் மேம்பாட்டு வங்கி (The Small Industrial Development Bank SIDBI) **ஏப்ரல் 2, 2018** அன்று தன்னுடைய நிறுவன தினத்தை கொண்டாடியுள்ளது.

- **சம்பார்க் (இணைப்பு), சன்வாத் (தொடர்பு), சுரக்ஸா (பாதுகாப்பு) மற்றும் சம்பிரஷான் (பரவல்)** ஆகியவற்றிற்கான தினமாக இத்தினம் கொண்டாடப்படுகிறது.

- இந்த நிகழ்ச்சியின் போது MSME (Micro Small and Medium Enterprise) தொடர்பு நிகழ்ச்சி (Contact Programme); **சம்ரிதி என்ற மெய்நிகர் உதவி**: சீரமைக்கப்பட்ட SIDBI இணையதளம் (www.sidbi.in) மற்றும் வங்கித் திறன் கருவி (Bankability Kit) ஆகியவை தொடங்கப்பட்டன.

## காதி கடைகள் இடங்காட்டும் செயலி

- மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவன அமைச்சகமானது (Ministry of Micro, Small & Medium Enterprises – MSME) நாட்டில் உள்ள 40,000 காதி நிறுவனங்களை புவியிடங்காட்டுவதற்காக (locating) கைபேசி செயலி ஒன்றை வெளியிட்டுள்ளது.

## வங்கதேசத்திற்கு கடனுதவி

- இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியான எக்ஸிம் (Export Import Bank – Exim Bank) வங்கி வங்கதேசத்திற்கு அதன் சமூக மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்காக 4.5 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என்ற அளவிற்கு (29,200 கோடிகள்) கடன் அளிக்க உள்ளது.

## மொத்த மதிப்பு கூட்டப்பட்ட முறையிலிருந்து (GVA) மீண்டும் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) முறைக்கு மாற்றம்

- இந்திய ரிசர்வ் வங்கி உலகத்தின் சிறந்த முறைகளை உதாரணம் காட்டி வளர்ச்சி மதிப்பீடுகளை சரியான முறையில் வழங்கிட மொத்த மதிப்பு கூட்டப்பட்ட முறையிலிருந்து **(Gross value Added – GVA)** மீண்டும் மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையிலான முறைக்கு **(Gross Domestic Product – GDP)** திரும்பியுள்ளது.

- மொத்த மதிப்புக் கூட்டப்பட்ட முறையானது உற்பத்தியாளர் தரப்பில் அல்லது விநியோகத் தரப்பில் இருந்து நாட்டின் பொருளாதார செயல்பாடுகளின் நிலையைத் தருகின்றது. ஆனால் மொத்த உள்நாட்டு உற்பத்தி முறை நுகர்வோர் தரப்பில் அல்லது தேவை ஏற்படும் தரப்பில் இருந்து உண்மை நிலையை பிரதிபலிக்கின்றது.

## பொருளாதார சுதந்திரதிர்கான கணக்கீடு

- இக்குறியீட்டில் 186 பொருளாதார நாடுகளில் **இந்தியா 130வது** இடத்தைப் பிடித்துள்ளது.

- 52.6 புள்ளிகளைப் பெற்று 2017 ஆம் ஆண்டிற்கான இக்குறியீட்டில் 143வது இடத்தில் இருந்து இந்தியா தற்போது 2018 ஆம் ஆண்டிற்கான குறியீட்டில் 54.5 புள்ளிகளைப் பெற்று 13 இடங்கள் முன்னேறி 130வது இடத்தைப் பிடித்துள்ளது.

- பொருளாதார சுதந்திரத்திற்கான குறியீட்டில் முதல் 10 இடங்களிலுள்ள நாடுகளாவன
    - ஹாங்காங்
    - சிங்கப்பூர்
    - நியூஸிலாந்து

## இந்தியா அஞ்சல் அலுவலக கட்டண வங்கி

- இந்தியாவில் அஞ்சல் அலுவலக கட்டண வங்கி ஏப்ரல் 2018-ல் தனது சேவையைத் தொடங்கியது.

- இந்திய அஞ்சல் கட்டண வங்கி என்று அறியப்படும் **இது நாட்டின் மிகப் பெரிய கட்டண வங்கியாகும்.**

## உலகின் ஆறாவது மிகப்பெரிய பொருளாதாரம்

- ஏப்ரல் 2018 ஆம் ஆண்டிற்கான சர்வதேச நாணய நிதியத்தின் உலகப் பொருளாதார கண்ணோட்டத்தின் படி, **இந்தியா** தற்போது ரூ 2.6 டிரில்லியனுடன் (GDP யில்) **ஆறாவது பெரிய பொருளாதாரமாக** உருவெடுத்துள்ளது. இதற்கு முன்னால் பிரான்சு ஆறாவது இடத்திலிருந்தது குறிப்பிடத்தக்கது.

- முதல் ஐந்து பொருளாதார நாடுகள் : **அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து.**

## கச்சா சணல் - குறைந்தபட்ச ஆதரவு விலை

- பிரதமர் தலைமையிலான பொருளாதார விவகாரங்கள் மீதான மத்திய அமைச்சரவைக் குழுவானது **2018-2019** ஆண்டு பருவ காலத்திற்கு **கச்சா சணல் பயிருக்கு (Raw Jute)** குறைந்தபட்ச **ஆதரவு விலையை (Minimum Support Price-MSP)** உயர்ந்த அனுமதி வழங்கியுள்ளது.

## வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்புதல்: இந்தியா முதலிடம்

- வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்பப்படுவதில் **இந்தியா முதல் இடத்தில்** முதலிடத்தில் உள்ளது.

## ஜன்தன் வங்கி கணக்குகள் எண்ணிக்கை – 31.45 கோடி

- **2017-ம் ஆண்டு தொடக்கத்தில் ஜன்தன் வங்கி** கணக்குதாரர்களின் எண்ணிக்கை $26\frac{1}{2}$ கோடியாக இருந்தது. அதுதான் தற்போது (April 2018) **31 கோடியே 45 லட்சம் ஆக** உயர்ந்து உள்ளது. இதில் சேமிப்பு ரூ.80 **ஆயிரம் கோடியை தாண்டி** உள்ளது.

## ஜன்தன் வங்கி கணக்குகள் (2014)

- அனைத்து தரப்பினருக்கும் வங்கி கணக்கு தொடங்குகிற நோக்கத்தை கொண்டு, 2014-ம் **ஆண்டு ஆகஸ்டு மாத் 28-ந் தேதி** அவர் **ஜன்தன் வங்கி கணக்கு திட்டம்** தொடங்கப்பட்டது.

- **“ஸ்வி.ஃப்ட்” (SWIFT) அமைப்பின் மேம்படுத்தப்பட்ட எல்லை தாண்டிய பணப்பரிமாற்ற சேவையை பெற்றுள்ள முதல் இந்திய வங்கி எனும் பெருமையை ‘ஐ.சி.ஐ.சி.ஐ’** (ICICI) வங்கி பெற்றுள்ளது.

- குறிப்பு: **SWIFT – Society for World Interbank Financial Telecommunication System platform** (உலகளாவிய பண பரிமாற்றத்திற்கான தகவல் தொடர்பு முறைமைக்கான அமைப்பு)

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## GPI வழித்தொடர் அமைப்பு

- பாதுகாப்பான நிதியியல் செய்திகள் சேவை வழங்குநரான **(Secure Financial Messaging Service Provider) SWIFT, வங்கிகள்** அவற்றுடைய உலகளாவியப் பரிவரித்தனையை எல்லா நேரங்களிலும் கண்காணிக்கவும், பணம் செலுத்தும் செயல்பாடுகளை (Payment activity) தொடர்ந்து கண்காணிக்கவும், வங்கிகளுக்கு உதவி புரியும் வகையில் **GPI (Global Payment Innovation) வழித் தொடர் அமைப்பை (GPI Tracker System)** விரிவுபடுத்தியுள்ளது.

## ISRO – GSAT 6A செயற்கைக் கோள்

- இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (ISRO), தொலைத் தொடர்பு செயற்கைக்கோளான **GSAT-6A வை, GSLV-F08 ராக்கெட்** மூலம் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி மையத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

- **GSLV-F08 ராக்கெட்டானது இந்தியாவின் 12வது GSLV ராக்கெட்** மற்றும் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்ட 5வது ராக்கெட் ஆகும்.

- **GSAT – 6 ஆனது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட உயர்நிலை கிரையோஜெனிக் என்ஜினுடன் (Indigenously built Cryogenic upper stage engine)** ஏவப்பட்டது.

## ஆயுஷ் QOL-2C

- **புற்றுநோயாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக AYUSH QOL-2C** எனும் குறியிடப்பட்ட மருந்தின் (coded drug) மேம்பாட்டை ஆயர்வேத அறிவியல் ஆராய்ச்சிக்கான மத்தியக் குழு **(Central Council for Research in Ayurvedic Sciences – CCRAS)** துவங்கியுள்ளது.

- மார்பகப் புற்றுநோயாளிகளில் இம்மருந்திற்கான மருத்துவ ஆய்வுகளை ஆயர்வேத அறிவியல் ஆராய்ச்சிக்கான மத்தியக் குழு மேற்கொண்டுள்ளது.

## ∴புளோரி மீட்டர்

- மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்திற்கான அணு சக்தித் துறையின் ஒரு அங்கமாக இராஜா ரமன்னா மையம் **நீரிலுள்ள யுரேனியத்தின் அளவை அளவிட ∴புளோரி மீட்டர்** என்ற கருவியை கண்டுபிடித்துள்ளது.

- இக்கருவியானது நீரில் **0.1 PPB (Parts per Billion) முதல் 100 PPB வரை யுரேனியத்தின் அளவை அளவிடும் சக்தி** கொண்டதாகும்.

## 4G இணைப்பு – பாட்னா

- ஓபன் சிக்னல் (Open Signal) கம்பியில்லா இணைய இணைப்பின் பரவலை வரைபடமிடல் நிறுவனத்தின் (wireless coverage mapping company) அறிக்கையின் படி 4G இணைப்பில் (4G connectivity) இந்தியாவின் 20 மிகப்பெரிய நகரங்களுள் **பாட்னா முதலிடத்தில்** உள்ளது.

- இப்பட்டியலில் பாட்னாவிற்கு அடுத்த நிலையில் இரண்டாவது இடத்தில் கான்பூர் உள்ளது.

## உத்தம் செயலி

- **நிலக்கரியின் தரத்தைக் கண்காணிப்பதற்காக** மத்திய இரயில்வே மற்றும் நிலக்கரி அமைச்சரான பியூஸ் கோயல் **உத்தம் என்ற செயலியை** வெளியிட்டுள்ளார்.

- உத்தம் என்ற வார்த்தை **'வெட்டியெடுக்கப்பட்ட நிலக்கரியை மூன்றாம் தரப்பு மதிப்பிடுவதில் வெளிப்படைத் தன்மையை கொணர்தல்'** என்ற அர்த்தத்தில் (Unlocking)

## ஆக்சிடோசின் ஹார்மோன் இறக்குமதிக்குத் தடை

- மத்திய அரசு கால்நடைத் துறையில் **ஆக்சிடோசின் (oxytocin) என்ற ஹார்மோனின் தவறான பயன்பாட்டைத் தடுப்பதற்காக** அதன் இறக்குமதி மீது தடை விதித்துள்ளது. சமூக ஆர்வலர்கள், இந்த ஹார்மோன் மூலம் கறவை மிருகங்களின் வாழ்நாள் குறைவதோடு அவற்றில் ஹார்மோன் குறைபாடுகள் ஏற்படுவதாகவும் குற்றம் சாட்டுகின்றனர்.

- அரசு, ஹார்மோன் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக உள்நாட்டு தயாரிப்பையே உபயோகிக்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளது.

## 4வது மார்க் IV LCU கப்பல் L-54

- மார்க் IV LCU கப்பல்கள் வரிகையின் 4-வது வகையில் மொத்தம் எட்டு கப்பல்கள் கொல்கத்தாவிலுள்ள கார்டன் ரீச் கப்பல் கட்டுநர் மற்றும் பொறியாளர் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டு கொல்கத்தாவில் இந்தியக் கடற்படையிடம் முறைப்படி வழங்கப்பட்டது.

## புது உறுப்பு கண்டு பிடிப்பு :-

- **தோலுக்கு அடியில் இண்டர்ஸ்டிடியம்** (interstitium) எனும் புதிய உறுப்பு ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

- நுரையீரல்கள், இரத்த நாளங்கள், தசைகள் மற்றும் குடல் நாளங்கள் ஆகியவற்றை சுற்றியுள்ள திசுக்களில் இந்த படலம் காணப்படுகின்றது.

- இந்த இண்டர்ஸ்டிடியம் படலமானது எப்படி புற்றுநோய் செல்கள் உடலில் பரவுகின்றன என புரிந்து கொள்ள உதவும். மேலும் **நோய் கண்டறி கருவியாகவும் பயன்படும் வாழும் திசுக்கள் மீதான ஆராய்ச்சி அடிப்படையிலான கான்போகல் லேசர் எண்டோமைட்ரோஸ்கோபி (probe-based confocal laser endomicroscopy on a living tissue)** எனும் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டின் மூலம் இண்டர்ஸ்டிடியம் எனும் இந்த படல உறுப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## புதியவகை – நோய் நுண்ணுயிர் எதிரிகள் - ஒடிலோர்ஹாப்டின்ஸ்

- **மருந்து எதிர்ப்புத் தன்மையை (drug resistance)** எதிர்க்கும் **திறனுடைய ஒடிலோர்ஹாப்டின்ஸ் (odilorhabdins) அல்லது ODLs** என்றழைக்கப்படும் புதிய **ஆண்டிபயாடிக் (நுண்ணுயிர்க்கொல்லிகள்)** வகையை ஆராய்ச்சியாளர்கள்

## தர்பன் - PCI செயலி

- **மத்திய தொலைத் தொடர்பு அமைச்சகமானது (Minister of Communications) தர்பன்-அஞ்சல் ஆயுள் காப்பீடு பாலிசிகளுக்கான (Rural Postal Life Insurance Policies)** சந்தாக்களின் (Premium) வசூலிப்பில் உதவும்.

## சுக்ஹாத் யாத்ரா-செயலி

- நெடுஞ்சாலை பயன்பாட்டாளர்களுக்காக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகமானது **(Ministry of Road Trasnport & Highways-MoRTH)**

**சுக்ஹாத் யாத்ரா (Sukhad Yatra) எனும் கைபேசி செயலியையும், 1033 எனும் இலவச அவசரகால உதவி அழைப்பு எண்ணையும் (Toll-free Emergency number)** தொடங்கியுள்ளது.

## இந்தியாவின் முதல் 5G ஆய்வகம்

- டெல்லியில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனமானது (Indian Institute of Technology-IIT) 5G உபகரணங்களின் தயாரிப்பு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் தரநிலைப்படுத்தலுக்காக (standardization) தன்னுடைய IIT வளாகத்தில் மிகப் பெரிய பல்-உள்ளீடு பல்-வெளியீடு (Massive Multiple-Input, Multiple-Output lab – MIMO) ஆய்வகத்தை தோற்றுவித்துள்ளது.

## உலகின் முதல் தொடு வில்லை

- மாற்றங்களுடைய ஒளி நுண்ணறிவு தொழில்நுட்பத்தோடு கூடிய (Transitions Light Intelligent Technology**) அகுவ் ஒயாசிஸ் (acuve oasys)** தொடு வில்லைகளின் (Contact Lenses) பயன்பாட்டிற்கு அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்துப் பொருள் நிர்வகிப்பு அமைப்பு (Food and Drug Administration-FDA) அனுமதி வழங்கியுள்ளது.

- பிரகாசமான ஒளி வெளிச்சத்திற்கு ஆட்படும் போது தானாக இருட்டிடக் கூடிய உலகின் முதல் தொடு வில்லை இதுவாகும்.

## IRNSS-1I

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது (Indian Space Research Organisation-ISRO) ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி மையத்திலிருந்து IRNSS-1I வழிகாட்டு ஏவுகணையை (navigation satellite) **ஏப்ரல்-11** அன்று வெற்றிகரமாக ஏவியுள்ளது.

- **PSLV-C41 இராக்கெட் மூலம் IRNSS-1I செயற்கைக் கோள்** ஏவப்பட்டுள்ளது.

- இஸ்ரோ மையத்துடனான கூட்டிணைவோடு இணைந்து பெங்களூருவைச் சேர்ந்த ஆல்பா வடிவமைப்பு தொழிற்நுட்ப நிறுவனத்தினால் IRNSS-1I உருவாக்கப்பட்டது.

- IRNSS-1I செயற்கைக் கோளானது ஒட்டுமொத்தமாக இஸ்ரோவின் நேவிக் வழிகாட்டு செயற்கைக் கோள் கூட்டமைவில் **(NAVIC navigation satellite constellation)** இணையும் எட்டாவது செயற்கைக் கோளாகும்.

- நேவிக் வழிகாட்டு செயற்கைக் கோள்கள் அமைப்பானது (NAVIC – Navigation with Indian Constellation) ஏழு செயற்கைக் கோள்களின் கூட்டமைப்பாகும்.

## LCU L53

- இந்தியக் கடற்படையானது INLCU L53 எனும் தரையிறங்கு ஊர்தி பயன்பாட்டுக் கப்பலை (Landing Craft Utility) போர்ட் பிளேரில் உள்ள கடற்படைப் பிரிவில் **ஏப்ரல்-25** அன்று இணைத்துக் கொண்டு உள்ளது.

- INLCU L53 கப்பல் ஆனது இந்திய கடற்படைக்காக கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் கப்பல் கட்டுமானம் மற்றும் பொறியியல் நிறுவனத்தால் (Garden Reach Shipbuilders and Engineers GRSE) வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டு வரும் **எட்டு மார்க் IV LCU (Mark IV) கப்பல்களின் தொடரில் மூன்றாவது கப்பலாகும்.**

### சிக்கன் குனியாவின் சிகிச்சைக்கான மூலக்கூறு

- ரூர்கியில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் (Indian Institute of Technology-IIT) ஆராய்ச்சியாளர்கள் **Pep I மற்றும் Pep II எனும் இரு சிறிய சக்தி வாய்ந்த மூலக்கூறுகளை** கண்டறிந்துள்ளனர்.

- **நட்சத்திரங்களுக்கு இடையேயான பொருட்களைப் பற்றிய ஆராய்ச்சிக்காக CHESS-4 (Colorado High-resolution Echelle Stellar Spectrograph) என்ற பெயரிலான செயற்கைக் கோளை** அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான “நாசா” (NASA) விண்ணில் செலுத்தியுள்ளது.

- **“பெடாசி” (“PETase”) என்ற பெயரில் பிளாஸ்டிக்குகளை உண்ணும் நொதியை (plastic-eating enzyme) இங்கிலாந்து மற்றும் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் ஜப்பான் நாட்டில் கண்டுபிடித்துள்ளார்கள். “இடியோனெல்லா சகான்சிஸ் 201-F6” (Idenoella Sakaiensis 201-F6) எனப்படும் பாக்டீரியம் பிளாஸ்டிக்கை** தன்னுடைய முக்கிய ஆற்றல் ஆதாரமாகக் கொண்டுள்ளது. “பெடாசி” (“PETase”) நொதியானது இந்த பாக்டீரியாவின் மூலம் சுரக்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளது.

- **“மெம்டிரான்சிஸ்டர்” (Memtransistor) என்று பெயரிடப்பட்டுள்ள மனித மூளையையொத்த மின்னணு மூளையை** அமெரிக்காவில் வசிக்கும் இந்தியரான வினோத் குமார் சங்வான் (Dr Vinod Kumar Sangwan) தலைதையிலான குழு கண்டுபிடித்துள்ளது.

- **“டெஸ்” (Transiting Exoplanet Survey Satellite (TESS):** சூரியனுக்கு அப்பால் உள்ள பூமி போன்று வாழத் தகுதியுடைய புதிய கிரகங்களை கண்டுபிடிப்பதற்காக, வானத்தில்

உள்ள 85 சதவிகித பகுதிகளை ஸ்கேன் செய்யக்கூடிய, “டெஸ்” (Transiting Exoplanet Survey Satellite

# முக்கிய தினங்கள்

## ஏப்ரல் 1- உத்கல் திவாஸ்(Utkal Diivas)

- **உத்கல் திவாஸ்(Utkal Diivas) எனப்படும் ஒடிஸா தினம்** ஆண்டுதோறும் ஒடிஸா மாநிலம் முழுவதும் ஏப்ரல் ஒன்றாம் தேதி அன்று கொண்டாடப்படுகிறது.

- 1936ஆம் ஆண்டு ஒடிஸா மாநிலமானது ஒருங்கிணைந்த பெங்கால்-பீகார்-ஒரிஸா மகாணாத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனி மாநிலமாக(combined-Bengal-Bihar-Orissa province) உருவாக்கப்பட்டதை நினைவு கூர்வதற்காக இத்தினம் ஒடிஸா மாநிலம்.

## ஏப்ரல் 5 - தேசிய கடல் சார் தினம்

- 55வது பதிப்பு தேசிய கடல் சார் தினம் - 2018ம் ஆண்டின் கருத்தரு – **“இந்திய கப்பல்துறை –வாய்ப்புகளின் பெருங்கடல்”**

## உலக சுகாதார தினம் - ஏப்ரல் 7

- உலக சுகாதாரத்தினுடைய முக்கியதுவத்தை நோக்கி வெகுஜன மக்களிடையே கவனத்தை கொண்டு வருவதற்காக உலக சுகாதார நிறுவனத்தின் (World Health Organisation-WHO) தலைமையின் கீழ் ஆண்டுதோறும் **ஏப்ரல் 7ம் தேதி உலக சுகாதார தினம்(World Health Day)** கொண்டாடப்படுகின்றது.

- 2018ம் ஆணடிற்கான உலக சுகாதார தினத்தின் **கருத்துரு ‘உலகளாவிய சுகாதார பாதுகாப்பு அனைவருக்கும் அனைத்து இடத்திலும்(Universal Health Coverage everyone everywhere).**

## உலக ஹோமியோபதி தினம் - ஏப்ரல் 10

- ஹோமியோபதி மருத்துவ முறையின் தந்தை மற்றும் நிறுவனரான **டாக்டர்.கிறிஸ்டியன் பிரெயேட்ரிச் சாமுவேல் ஹாஹ்னெமன்** (Dr. Christian Friedrich Samuel Hehnemann) அவர்களை கவுரவிப்பதற்காகவும் மரியாதை செலுத்துவதற்காகவும் ஆண்டுதோறும் **ஏப்ரல் 10-ஆம் தேதி உலக ஹோமியோபதி**

தினம் **(World Homoeopathy Day-WHD)** கொண்டாடப்படுகின்றது.

## தேசிய பாதுகாப்பு தாய்மை தினம் - ஏப்ரல் 11

- கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் பெண்களுக்கான(lactating women) முறையான சுகாதார பராமரிப்பு சிகிச்சை மற்றும் மகப்பேறு வசதிகள் மீது வழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ஏப்ரல் 11ஆம் தேதி தேசிய பாதுகாப்பான தாய்மை தினம்(National safe Motherhood Day-NSMD) கொண்டாடப்படுகிறது.

- 2018ஆம் ஆண்டிற்கான தேசிய பாதுகாப்பான தாய்மை தினத்தின் **கருத்துரு 'மரியாதைக்குரிய மகப்பேறு சிகிச்சை பராமரிப்பு"(Respected Maternity Care) ஆகும்**

## குடிமைப் பணிகள் தினம் - ஏப்ரல் 21

- ஆண்டுதோறும் **ஏப்ரல் 21ம் தேதி** இந்தியாவில் குடிமைப் பணிகள் தினம் கொண்டாடப்படுகிறது.

- 1947ஆம் ஆண்டு ஏப்ரல் 21-ம் தேதி அனறு டெல்லியில் உள்ள மெட்கால்பே இல்லத்தில்(Metcalfe House), **இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் பட்டேல் நாட்டின் முதல் இந்திய குடிமைப்பணி அதிகாரிகளின் முதல் பிரிவோடு (first batch of IAS officers)** ஆற்றிய உரையை நினைவு கூர்வதற்காக ஆண்டுதோறும் **ஏப்ரல்-21ம் தேதி குடிமைப் பணிகள் தினம்**(Civil Services Day) கொண்டாடப்படுகிறது.

- சிவில் சர்விஸ் தினத்தை முன்னிட்டு மத்தியப் பணியாளர், பொதுமக்கள் குறைபாடுகள் ஓய்வூதியத் துறை அமைச்சகமானது(Ministry of Personnel, Public Grievances and pensions) புதுதில்லியில் ஏப்ல் 20 மற்றும் 21-ம் தேதிகளில் இரு நாள் நிகழ்ச்சி ஒன்றை நடத்தியுள்ளது. இந்நிகழ்ச்சியின் தொடக்க நிகழ்வின் போது **துணைக் குடியரசுத் தலைவர் "Emulating Excellence – Takeawas for Replication" எனும் புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.**

## புவி தினம் - ஏப்ரல் 22

- புவியினைப் பாதுகாக்க வேண்டிய தேவையைப் பற்றியும், அதனுடைய சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் உலக மக்கள் அனைவரிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் **ஏப்ரல் 22ஆம் தேதி புவி தினம்(Earth Day)** உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது.

## உலக புத்தகம் மற்றும் பதிப்புரிமை தினம் - ஏப்ரல் 23

- உலக மக்களிடையே புத்தக வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கவும், புத்தகங்களின் வெளியீடு மற்றும் பதிப்புரிமையை (copyright) மேம்படுத்தவும் ஆண்டுதோறும் உலகம் முழுவதும் ஏப்ரல் 23-ம் உலக புத்தகம் மற்றும் பதிப்புரிமை தினம்(World Book and Copyright Day) கொண்டாடப்படுகின்றது.

- ஆண்டு தோறும் ஏப்ரல் 23ம் தேதி அன்று யுனெஸ்கோ(UNESCO)அமைப்பும், பிற சர்வதேச அமைப்புகளும் உலகின் ஏதேனும் ஒரு பகுதியை உலக புத்தக தலைமையமாக(World Book Capital) ஓர் ஆண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கும்.

- இந்த வகையில், யுனெஸ்கோ அமைப்பானது **இந்த ஆண்டு கிரிஸ் நாட்டின் தலைநகரமான ஏதென்ஸ்(Athens) நகரை 2018ம் ஆண்டிற்கான உலக புத்தக தலைநகராக(World Book Capital for 2018)** அறிவித்துள்ளது.

## தேசிய பஞ்சாயத்து ராஜ்தினம் - ஏப்ரல் 24

- இந்தியாவில் ஆண்டுதோறும் ஏப்ரல் 24ம் தேதி தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம்(National Panchayati Raj Diwas) கொண்டாடப்படுகின்றது.

- **தேசிய பஞ்சாயத்து ராஜ் தினமானது 1992ம் ஆண்டு இயற்றப்பட்ட 73வது அரசியலமைப்பு திருத்தச்சட்டம் சட்டம் 1993ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ம் தேதி முதல் நடைமுறைக்கு** வந்ததை குறிப்பதற்காக கொண்டாடப்படுகின்றது.

- **முதல் தேசிய பஞ்சாயத்து ராஜ் தினமானது 2010ம்** ஆண்டு கொண்டாடப்பட்டது.

### உலக மலேரியா தினம் - ஏப்ரல் 25

- உலகம் முழுவதும் ஆண்டுதோறும் ஏப்ரல் 25ம் தேதி உலக மலேரியா தினம் கொண்டாடப்படுகின்றது.
- 2018ம் ஆண்டிற்கான உலக மலேரியா தினத்தின் **கருத்துரு 'மலேரியாவை தோற்கடிக்க தயாராகுதல்"(Ready to beat malaria)**

# விருதுகள்

### தமிழ்நாடு அரசின் உலகத் தமிழ்ச் சங்க விருதுகள் 2016 – 2017 – அறிவிப்பு

- **2016 மற்றும் 2017** ஆம் ஆண்டுக்கான **உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்**, சென்னை தலைமைச் செயலகத்தில் ஏப்ரல் 5 அன்று முதலமைச்சர் **க.எடப்பாடி பழனிசாமி** வழங்கினார்.

### 2017ம் ஆண்டுக்கான விருதுகள்

- **தமிழ்த்தாய் விருது** – பெங்களூரு தமிழ்ச்சங்கம்
- **கபிலர் விருது** – கு.வெ. பாலசுப்பிரமணியன், கல்வெட்டு ஆய்வாளர்
- **கம்பர் விருது** – சுகி.சிவம், தமிழறிஞர்
- **ஜி.யு.போப் விருது** – கோ. ராஜேஸ்வரி கோதண்டம், சிறந்த மொழி பெயர்ப்பாளர்
- **உமறுப்புலவர் விருது** - ஹாஜி. எம். முகம்மது யூசுப்
- **இளங்கோவடிகள் விருது** – வெ.நல்லதம்பி
- **ஜி.யு.போப் விருது** – கோ. ராஜேஸ்வரி கோதண்டம்
- **உமறுப்புலவர் விருது** - ஹாஜி எம்.முகம்மது யூசுப்பு

- **அம்மா இலக்கிய விருது** – எம்.எஸ்.ஸ்ரீலட்சுமி

## 2017 உலகத் தமிழ் சங்க விருதுகள்

- **இலக்கிய விருது** – சந்திரிகா சுப்ரமணியன், ஆஸ்திரேலியா
- **இலக்கண விருது** – உல்ரிகே நிகோலஸ், ஜெர்மனி
- **மொழியியல் விருது** – மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா, ஆஸ்திரேலியா

## 2016 உலகத் தமிழ்ச் சங்க விருதுகள்

- **இலக்கிய விருது** – நா. ஆண்டியப்பன், சிங்கப்பூர்
- **இலக்கண விருது** – பெஞ்சமின் லெபோ, பிரான்ஸ்
- **மொழியியல் விருது** – சுபாஷினி, ஜெர்மனி
- **முதலமைச்சர் கணினித் தமிழ் விருது** – அல்டிமேட் மென்பொருள் தீர்வக நிறுவனர் இரா. துரைபாண்டி

## தாதா சாகேப் பால்கே விருது - இந்தி நடிகர் “வினோத்கன்னா”

- இந்திய திரைப்படத்துறையில் வழங்கப்படும் மிக உயரிய விருது, தாதா சாகேப் பால்கே விருது ஆகும். 2017ம் ஆண்டிற்கான இவ்விருதுக்கு மறைந்த **இந்தி நடிகர் “வினோத்கன்னா”** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- **சிறந்த நடிகை** – மறைந்த நடிகை “ஸ்ரீதேவி” (மாம் இந்தி படம்)
- **இரு தேசிய விருதுகள் பெறும் “ஏ.ஆர்.ரகுமான்”**
- **சிறந்த இசையமைப்பாளர்** - ஏ.ஆர். ரகுமான்
- **சிறந்த பின்னணி இசை** – ஏ.ஆர். ரகுமான்

- இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமானுக்கு 2 விருதுகள் கிடைத்துள்ளது. **“மாம்” இந்தி படத்துக்கு பின்னணி இசைக்காகவும், மணிரத்னம் இயக்கிய காற்று வெளியிடை** படத்தில் சிறந்த இசையமைப்பாளருக்காவும் **ஏ.ஆர்.ரகுமான் இந்த விருதுகளை** பெற்றுள்ளார்.

## சர்வதேச பெண் தலைமையாளர் விருது பெறும் - வங்காள தேச பிரதமர் ஷேக் ஹசினா

- வங்காள தேசம் நாட்டுப் பெண்கள்கல்வியிலும், தொழில் முனைவோராகவும் உயர்வதற்கு பணியாற்றிய **“வங்காள தேச பிரதமர் ஷேக் ஹசினா”** அவர்களின் வாழ்நாள் சேவையை கவுரவிக்கும் வகையில்

- **“2018 சர்வதேச பெண் தலைமையாளர் விருது”** (Global Womens Leadership Award) வழங்கப்பட்டது.

- ஏப்ரல் 27ம் தேதி **ஆஸ்திரேலியா நாட்டின் சிட்னி நகரில்** நடைபெற்ற **2018ம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் உச்சி மாநாட்டில் இந்த விருது** வழங்கப்பட்டது.

## 2017 சரஸ்வதி சம்மான் விருது பெறும் “சித்தன்சு யஷசாச்சந்திரா

- **2017ம் ஆண்டிற்கான சரஸ்வதி சம்மான் விருதுக்கு,** குஜராத் கவிஞர், நாடாக ஆசிரியரும், கல்வியாளருமான **சித்தன்சு யஷசாச்சந்திரா,** அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- இவரது **‘வக்கார்’ என்ற வசனக்கவிதை தொகுப்பிற்காக இந்த விருது** அளிக்கப்படவுள்ளது.

## 2018 தேசிய அறிவுசார் சொத்துரிமை விருது பெற்ற “சஞ்சய் காந்தி”

- **2018** ஆம் ஆண்டுக்கான **தேசிய அறிவுசார் சொத்துரிமை விருது சஞ்சய் காந்திக்கு** மத்திய அரசு வழங்கியது. ரூ.1 லட்சம் ரொக்கப்பரிசுடன் கூடிய இந்த விருதை **மத்திய வணிகம் மற்றும் தொழில்துறை மந்திரி சுரேஷ் பிரபு** வழங்கினார்.

- **“இந்தியா தொழில் தலைமை விருதுகள் 2018”** (India Business Leader Awards) ல் சிறந்த தொழில் தலைமைக்கான விருது சட்டிஸ்கர் மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## யுனெஸ்கோ பத்திரிக்கை சுதந்திரப் பரிசு – 2018

- யுனெஸ்கோ அமைப்பின் 2018ம் ஆண்டிற்கான **உலக பத்திரிக்கைச் சுதந்திர பரிசு (World Press Freedom Prize)** ஷாவ்கான் (Shawkan) எனப் பிரபலமாக அறியப்படும் **எகிப்திய புகைப்பட இதழியலாளரான மஷ்மூத் அபு ஜயீத்திற்கு** (Mahmoud Abu Zaid) வழங்கப்பட்ட உள்ளது.

- ஐ.நாவின் கலாச்சார அமைப்பான **யுனெஸ்கோவினால் இந்த விருது 1997 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.**

# நியமனங்கள்

- மூத்த வழக்கறிஞரான **இந்து மல்ஹோத்ரா** இந்திய உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக பதவியேற்றுள்ளார்.

- இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக தீபக் மஸ்ரா இவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

- இதன் மூலம் **வழக்கறிஞர் (பார்) அமைப்பிலிருந்து உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக நேரடியாக நியமிக்கப்பட்டுள்ள முதல் பெண் நீதிபதி இந்து மல்ஹேத்ரா** ஆவார். இவருடைய நியமனம் மூலம் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் எண்ணிக்கையானது 25லிருந்து தலைமை நீதிபதி உட்பட அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையான 31 ஆக உயர்ந்துள்ளது.

- ஒட்டுமொத்தமாக **இந்து மல்ஹோத்ரா உச்ச நீதிமன்றத்தின் ஏழாவது பெண் நீதிபதியாவார்.**

- **M. பாத்திமா பீவி உச்ச நீதி மன்றத்தின் முதல் பெண் நீதிபதி** ஆவார். இவர் 1989ம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

## BCCI ஊழல் தடுப்புப் பிரிவின் புதிய தலைவராக “அஜித் சிங் தேர்வு”

- இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (BCCI) **ஊழல் தடுப்புப் பிரிவின் புதிய தலைவராக “அஜித் சிங்”** நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இராஜஸ்தான் மாநிலத்தில் DGP-யாக பதவி வகித்து ஓய்வு பெற்றார்.

## கேப்டவுன் நகரில் "உலகின் முதல் தண்ணீர் காவலர்கள்" நியமனம்

- தென் ஆப்பிரிக்காவின் இரண்டாவது பெரிய நகரம் **"கேப் டவுன்" (Cape Town), ஏப்ரல் 16 அன்று** இந்நகரத்தில் குடிநீர் முழுவதும் தீர்ந்துபோய் 'DAY ZERO' என்ற **பூஜ்ஜிய** நாளாக அறிவிக்கப்படவுள்ளது.

- கேப் டவுன் நகரில் தண்ணீரைப் பாதுகாக்க கேப் டவுனில்தான் **உலகில் முதன்முதலாக தண்ணீர் காவல் அதிகாரிகள்** நியமிக்கப்பட்டுள்ளனர். முதல் கட்டமாக 60 அதிகாரிகள் அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- **பாராளுமன்ற மாநிலங்களவை ஆளும் கட்சி தலைவராக "அருண் ஜெட்லி" நியமனம்**

- **பாராளுமன்ற ராஜ்யசபையின் ஆளும்கட்சி தலைவராக நிதி மந்திரி அருண் ஜெட்லி** இன்று மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். **நிதி அமைச்சர் அருண் ஜெட்லி உத்திரப்பிரதேசம்** மாநிலத்தில் இருந்து மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டாவது முறையாக மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## நாஸ்காம் தலைவராக "தேப்ஜானி கோஷ்" பொறுப்பேற்பு

- **நாஸ்காம் (NASSCOM) தலைவராக, தேப்ஜானி கோஷ்** பொறுப்பேற்றுள்ளார். இவருக்கு முன்பாக **ஆர்.எஸ்.சந்திரசேகர்** இப்பதவியல் இருந்தார்.

- **NASSCOM: National Association of Software and Services Companies**

## செர்பியா குடியரசு தூதராக "சுப்ரதா பட்டாச்சார்ஜிஜி" நியமனம்

- **செர்பியா குடியரசு** நாட்டிற்கான இந்திய தூதராக **"சுப்ரதா பட்டார்சார்ஜி"** (Subrata Bhattacharjee) நியமிக்கப்பட்டுள்ளார்.

## மத்திய பணியாளர் தேர்வாணைய உறுப்பினரா "எம்.சத்தியவதி" பொறுப்பேற்பு

- மத்திய பணியாளர் தேர்வாணைய (UPSC) **உறுப்பினராக "எம்.சத்யவதி"** அவர்கள் ஏப்ரல் 9 அன்று பொறுப்பேற்றுள்ளார். **மத்திய பணியாளர் தேர்வாணைய (UPSC) தலைவர் "வினய் மிட்டல்"** பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

## பொது இயக்குநர் - தேசிய போட்டித் தேர்வுகள் முகமை

- மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் **(CBSE – Central Board of Secondary Education) முன்னாள் தலைவர் மற்றும் செயலாளரான வினித் ஜோஷியை தேசிய போட்டித் தேர்வுகள் முகமையின் (National Testing Agency – NTA) பொது இயக்குநராக** மத்திய அரசு நியமித்துள்ளது.

## 2017ம் ஆண்டுக்கான 65வது தேசிய திரைப்பட விருதுகள்

- 2017ம் ஆண்டுக்கான 65வது தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ள சிறந்த பொழுதுபோக்கு மற்றும் பொழுதுபோக்கு அல்லாத திரைப்படங்கள், திரைப்படம் தொடர்பான சிறந்த நூல், திரைத்துறையில் சாதனை புரிந்தோரைக் கவுரவிக்கும் வகையிலான தாதா சாகேப் விருது ஆகிய பல்வேறு விருதுகள் வழங்கப்பட உள்ளன.

## தமிழ்நாட்டில் விருது வென்றவர்கள்.

- **சிறந்த பெண் பின்னணிப் பாடகர் : ஷாஷா திரிபதி** (காற்று வெளியிடை திரைப்படத்தின் VAAN பாடல்)

## சிறந்த இசைப் பணிக்கான விருது:

- பாடல்கள் - **ஏ.ஆர் ரஹ்மான்** (காற்றுவெளியிடை)
- பின்னணி இசை – ஏ.ஆர்.ரஹ்மான் (MOM)
- சிறந்த சிறப்பு விளைவுகள் - பாகுபலி 2
- சிறந்த ஆக்ஷன் இயக்குனருக்கான விருது – பாகுபலி 2
- **தமிழில் சிறந்த நடிப்பு - TOLET (இயக்குனர் : செசியான்)**

# புத்தகங்கள்

- **டர்புலென்ட் இயர்ஸ் 1980 – 1996' (The Turbulent Years : 1980 – 1996) என்ற புத்தகத்தின் ஆசிரியர் - பிரணாப் முகர்ஜி**

- **"டாக்டர் அம்பேத்கர் : மாமனிதரின் சபதம்" (Dr.Babasaheb Ambedkar : Vyakti Nahin Sankalp) நூல்** தில்லி குடியரசுத் தலைவர் மாளிகையில் 2018, **ஏப்ரல் 14** அன்று வெளியிடப்பட்டது. அந்த நூலைக் குடியரசுத் துணைத் தலைவர் **திரு. எம். வெங்கைய நாயுடு வெளியிட்டார்.** முதல் பிரதியைக் குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் பெற்றுக் கொண்டார்.

## சுற்றுச்சூழல் நிகழ்வுகள்

### டெல்லி மாநகரில் BS-VI எரிபொருள் தரநிலை அமல்

- இந்தியாவில் **BS-VI தரநிலை எரிபொருளை** முதல் நகரமாக **டெல்லி நகரம்** அறிமுகப்படுத்தியுள்ளது (Delhi becomes first city to roll-out BS-VI fuel).

### புவி மாசு கண்டறியும் "அனிதா சாட்" செயற்கைகோள்

- புவி மாசு கண்டறிவதற்கா **"அனிதா சாட்"** என்ற செயற்கைகோளை **திருச்சியை சேர்ந்த மாணவி வில்லட் ஒவியா** தயாரித்துள்ளார்.

- புவி வெப்பமயமாதலின் **காரணமாக எந்த அளவிற்கு மாசுபட்டுள்ளது** என்பதை கண்டறிய **"அனிதா சாட்" செயற்கைகோள் மெக்சிகோவிலிருந்து** ஏவப்படவுள்ளது.

### தமிழ்நாட்டின் புவி பரப்பில் வனப்பகுதி -17.59%

- **தமிழ்நாட்டின் புவி பரப்பில் 17.59 விழுக்காடு** பகுதி வனப்பகுதியாக இருக்கிறது. தேசிய வனக்கொள்கை படி **மாநிலம் ஒன்றின் புவி பரப்பில் 33.3 விழுக்காடு** வனங்கள் இருக்க வேண்டும்.

## ஜவாத் ரஹிம் - தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் செயல் தலைவர

- தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் (National Green Tribunal – NGT) தலைவர் ஓய்வு பெற்று மூன்று மாதங்கள் முடிவடைந்துள்ள நிலையில் தற்போது, தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் பொறுப்புத் தலைவராக கர்நாடக உயர்நீதி மன்றத்தின் முன்னாள் நீதிபதியான ஜவாத் ரஹிமை உச்ச நீதிமன்றம் நியமித்துள்ளது.

## CA/TS கூட்டிணைவு – புலிகள் கணக்கெடுப்பு

- அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி உறுதிபடுத்தப்பட்ட பாதுகாப்பு மற்றும் புலிகள் தரநிலைகள் கூட்டிணைவின் **(Conservation Assured / Tiger Standards – CA/TS) ஒரு பகுதியாக உள்ள 13 சதவீத புலிகள் பாதுகாப்புப் பகுதிகள் (tiger conservation areas)** மட்டுமே உலக பாதுகாப்புத் தரநிலைகளை (Global conservation standards) அடைந்துள்ளன.

## கங்கா ஹரிதீமா யோஜனா

- கங்கா பசுமையாக்கல் திட்டம் (Ganga Greenery Scheme) என்றழைக்கப்படும் கங்கா ஹரிதீமா யோஜனா (Ganga Hariteema Yojana) என்ற திட்டத்தை கங்கை நதிப் படுகையில் அமைந்துள்ள உத்திரப்பிரதேச மாநிலத்தின் 27 மாவட்டங்களில் அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.

- மண் அரிப்பை (Land erosion) கட்டுப்படுத்துவதும், கங்கை நதியினுடைய நீர்பிடிப்புப் பகுதிகளில் (Catchment areas) பசுமைப் பரப்பை (green cover) அதிகரிப்பதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.
- **"ஒரு நபர் ஒரு மரம்"** என்ற முழக்கத்தின் ("One Person One Tree" Slogan) கீழ் தங்களுடைய சொந்த தனியார் நிலங்களில் மரங்களை நடுவதற்கு பொது மக்கள் இத்திட்டத்தின் கீழ் ஊக்குவிக்கப்படுவர்.

## உலகளாவிய நைட்ரஜனின் புதிய மூலம்

- அண்மையில் வெளியிடப்பட்ட ஓர் ஆய்வின்படி, பூமியில் உள்ள கால் பங்கு **நைட்ரஜனானது புவியினுடைய பாறைப் படுகைகளின் (bedrock) வானிலைக் காரணமான பாறைச் சிதைவுறுச்** (weathering) செயல்பாடுகளினால் உருவாகின்றன.

- நீண்ட நாட்களாகவே, நடப்பளவிலான அறிவியலானது (prevailing science) தாவரங்களுக்கு கிடைக்கக்கூடிய பூமியில் உள்ள அனைத்து நைட்ரஜன்களும் வளிமண்டலத்திலிருந்தே கிடைக்கின்றன என உணர்த்தி வந்தது.

- தற்போது இந்த ஆய்வானது, இயற்கைச் சூழலமையில் (Natural ecosystems) உள்ள **நைட்ரஜனில் 26 சதவீதமானது பாறைகளிலிருந்து** கிடைக்கின்றது எனவும், மீதி அளவானது வளி மண்டலத்திலிருந்து கிடைக்கிறது எனவும் கண்டறிந்து உள்ளது.

## இந்தியாவின் முதல் மின்னிழை – விளக்கு இல்லா பஞ்சாயத்து

- **கேரள மாநிலத்தின்** காசர்கோடு மாவட்டத்தில் அமைந்துள்ள **பிலிகோடு (Pilicode) எனும் கிராமப் பஞ்சாயத்தானது நாட்டின் முதல் மின்னிழை விளக்குகள் இல்லா கிராமப் பஞ்சாயத்தாக (Filament bulb – free grama panchayat)** உருவாகியுள்ளது.

## மேற்கு தொடர்ச்சி மலை – புதிய புல்இனம்

- மேற்குத் தொடர்ச்சி மலைகளின் உயிர்ப்பல்வகைத் தன்மையினுடைய உயிரின வள மிகுமிடத்தில் (Hot spot) அமைந்துள்ள அகஸ்தியர் மலை உயிர்க்கோள இருப்பின் (Agasthyamala Biosphere Reserve) உள் அமைந்துள்ள பொன்முடி மலையில் பிம்பிரிஸ்டைலிஸ் அகஸ்தியமலேயன்சிஸ் (Fimbristylis agasthyamalaensis) எனப் பெயரிடப்பட்ட புதிய புல் போலான தாவர இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

## புதிய மாசுபாடு – முன்னறிவிப்பு

- குறைந்தபட்சம் இரு நாட்களுக்கு முன்கூட்டியே சுற்றுப்புறத்தில் பரவி காணப்படுகின்ற **நுண் மாசு பொருட்களின் (particulate matter – PM) எதிர்ப்பார்க்கப்படும் அளவினை அறிய உதவும் மாசு முன்னறிவிப்பு அமைப்பினை (pollution – forecast system) உருவாக்க இந்தியா, அமெரிக்கா மற்றும் பின்லாந்துடன் கூட்டிணைந்துள்ளது.**

- இந்த செயல்முறையை மத்திய புவி அறிவியல் அமைச்சகம் (Ministry of Earth Sciences – MoES) ஒருங்கிணைக்க உள்ளது.

## புதிய தவளை இனம் கண்டுபிடிப்பு

- கோவா மாநிலத்தில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகளின் உயர் நில பீடபூமிப் பகுதிகளில் (highland plateaus) பெஜேர்வரியா கோயேம்சி (Fejevarya goemchi) எனும் புதிய தவளை இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

- இந்த புதிய தவளை இனத்திற்கு அது கண்டுபிடிக்கப்பட்ட இடமான கோவா மாநிலத்தின் பெயர் கொண்டு பெஜேர்வரியா கோயேம்சி எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## டையூ பொலிவுறு நகரம்

- டையூ பொலிவுறு நகரமானது (Diu Smart City) பகல் வேளைகளில் **100 சதவீதம் புதுப்பிக்கக் கூடிய ஆற்றலில் இயங்குகின்ற இந்தியாவின் முதல் நகரமாக உருவாகியுள்ளது.**

## மற்ற நிகழ்வுகள்

- மத்திய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் ஹர்சிம்ராத் கவுர் பாதல் பசுமைத் தொழில்நுட்ப பெரிய உணவுப் பூங்கா பிரைவேட் லிமிடெட்-ஐ **இராஜஸ்தானின் அஜ்மீரில்** உள்ள ரூப்நகரில் தொடங்கி வைத்தார். இது **ராஜஸ்தான் மாநிலத்தின் முதல் பெரிய உணவுப் பூங்கா**வாகும்.

- பழம்பெரும் இயக்குநர் **சேகர் கபூர், 65வது தேசிய திரைப்பட விருதுகளின் மத்தியக் குழுவின் தலைவராக** நியமிக்கப்பட்டுள்ளார். இந்த மத்தியக் குழுவில் ஒரு தலைவர், 10 விற உறுப்பினர்கள் மற்றும் 5 மண்டலக் குழுக்களின் தலைவர்கள் இடம் பெறுவர்.

- கடக்வாஸ்லாவில் அமைந்துள்ள தேசிய பாதுகாப்புப் பயிற்சி நிறுவனத்தின் முன்னாள் மாணவரான லெப்டினன்ட் ஜெனரல் ஹர்பால் சிங் எல்லை சாலைகள் துறைத் தலைவராக (Direct General Border Roads) நியமிக்கப்பட்டுள்ளார். 1982ம் ஆண்டு பொறியாளர்கள் படைப் பிரிவில் இணைந்த இவர் பின்னர், ஜம்மு மற்றும்

காஷ்மீர் பள்ளத்தாக்கில் எல்லை சாலைப் பணிகள் படையின் (Border Road Task Force) தலைவராக நியமிக்கப்பட்டார்.

- கிரிக்கெட் வீரர் **சச்சின் டெண்டுல்கர், Skill Next எனும் BMWவின் திறன் மேம்பாட்டுத் தொடக்கத்தை (Initiative), BMW கார் நிறுவனத்தின் சென்னைக் கிளையில்** தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கிண்டி பொறியியல் கல்லூரி (College of Engineering, Guindy) மாணவர்களும் கலந்து கொண்டனர்.

- ஆசிய வளர்ச்சி வங்கியும், இந்திய அரசும் இமாச்சலப் பிரதேசத்தில் தொழில்நுட்ப மற்றும் திறனறிவுக் கல்வி அளிக்கும் பயிற்சி நிலையங்கள் மற்றும் அதற்கான சுற்றுச்சூழலைப் புதுமைப்படுத்தி மேம்படுத்திட 80 மில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு கடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

- சோளத்தின் ஆற்றல் மற்றும் புத்தாக்கங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக சோளத்தின் மீதான 5வது இந்திய மாநாடு புது தில்லியில் FICCI வளாகத்தில் நடைபெற்றது. வேளாண் சந்தையிடலில் வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் உற்பத்தியாளர்களின் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவது மற்றும் விவசாயிகளுக்கிடையேயான இணைப்பை ஏற்படுத்துவது ஆகியவை இம்மாநாட்டின் நோக்கங்கள் ஆகும்.

- குருகிராமில் அமைந்து ஹோட்டல் வசதி ஏற்பாட்டு நிறுவனமான ஓயோ நிறுவனம் **"ஓயோ ஸ்மார்ட் நாணயம்"** எனும் தனது சொந்த **இணைய சங்கேத பணத்தை** (Cryptocurrency) வெளியிடப்பட்டுள்ளது.

- இந்தியாவில் முதல் முறையாக நடைபெற இருக்கும் **மிகப்பெரிய சர்வதேச நாடக விழாவான 8வது நாடகங்களின் ஒலிம்பிக் போட்டியை ஜெய்ப்பூர் இணைந்து நடத்த உள்ளது**. இந்த நாடக விழாவின் ஜெய்ப்பூர் அத்தியாயம் ராஜஸ்தான் அரசின் கலை மற்றும் கலாச்சாரத் துறையைச் சேர்ந்த ரவீந்திர மஞ்ச் சங்கத்தோடு இணைந்து, மத்திய கலாச்சார அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் தேசிய நாடகப் பள்ளியால் நடத்தப்படுகின்றது.

- இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் போர்ட் **உலக இந்திச் செயலகத்தின் (World Hindi Secretariat) கட்டிடத்தை மொரிஸியஸ் நாட்டின் லூயிசிஸில் (Port Louis)** தொடங்கி வைத்துள்ளார். முழுவதும் இந்திய அரசின் நிதியால் இந்தச் செயலகம் கட்டப்பட்டுள்ளது. இதற்காக இந்தியா 33 கோடி ரூபாயை வழங்கியுள்ளது. மொரிஸியஸ் அரசு இதற்கான நிலத்தை வழங்கியது.

- மதுபாணி ரயில் நிலையம் மிதிலா ஓவியங்கள் மூலம் முழுமையாக அலங்கரிக்கப்பட்டுள்ளது. இந்த அலங்கரிப்பு இந்திய ரயில்துறையின் புதுமையான

முயற்சி ஆகும். மதிலா ஓவியம் என்பது இந்தியாவின் மிதிலா பகுதியிலும் (குறிப்பாக பீகாரில்) நேபாளத்திலும் கடைபிடிக்கப்படும் நாட்டுப்புற ஓவியக் கலை ஆகும். இது காட்டுத் தேன் எனப் பொருள்படும் மதுபாணி ஓவியங்கள் என்றும் அழைக்கப்படும். இது பழமையான இந்திய நூலான ராமாயணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- மிதிலா ஓவியங்கள் பெருமைக்கு புவிசார் குறியீடு என்ற தகுதியைப் பெற்றுள்ளது.

- ஆப்பிரிக்க நாடான சுவாஜிலாந்தின் தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனத்திற்கு (National Disaster Management Agency) ஆதரவளிக்கவும், உணவு தானிய உற்பத்திக்காகவும் இந்தியா ஒரு மில்லியன் அமெரிக்க டாலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

- தொழிலாளர் துறை செயலாளரான M. சத்யவதி அவர்கள் மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினராக பொறுப்பேற்றுள்ளார். மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரான வினய் மிட்டல் இவருக்கு பதவி மற்றும் இரகசிய காப்பு உறுதி மொழியை (oath of office and secrecy) முன்மொழிந்தார்.

- மத்திய சுகாதார அமைச்சகத்தில் சுகாதார சேவை பொது இயக்குநராக (பொறுப்பு) (Director General Health Services) டாக்டர் புரோமிலா குப்தா நியமிக்கப்பட்டுள்ளார். சுகாதார சேவை பொது இயக்குநரகத்தில் தற்போது சுகாதார சேவை பொது இயக்குநர் பொறுப்பிலுள்ள டாக்டர் D.B அதானிக்கு அடுத்து தற்போது புரோமிலா குப்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

- காவல்துறை மேலாண்மைத் தலைவர் (Inspector General) K.R. நாட்டியால் கூடுதல் காவல்துறை மேலாண்மைத் தலைவர் நிலைக்கு பதவி உயர்வு பெற்று தற்போது புதிய கடலோரக் காவல்படைத் தலைவராக (கிழக்குப் கடல்பகுதி) நியமிக்கப்பட்டுடள்ளார். இவர் முந்தைய காவல்துறை மேலாண்மைத் தலைவர் KS ஷியோரன் அவர்களைத் தொடர்ந்து ஏப்ரல் 12, 2018 அன்று பதவியேற்றுக் கொண்டார்.

- ஐ.நா. உலக சுற்றுலா நிறுவனம் அர்ஜென்டினாவின் நட்சத்திர கால்பந்து வீரரான பார்சிலோனாவைச் சேர்ந்த லயோனல் மெஸ்ஸியை சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கான பொறுப்புடைமையுடைய தூதராக நியமித்துள்ளது.

- உத்திரப்பிரதேச மாநிலத்தின் அமேதி மாவட்டத்தில் உள்ள கதவ்ராவில் உத்திரப்பிரதேசம் நீம் என்ற திட்டத்தை மத்திய ஜவுளித்துறை மற்றும் தகவல்

மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சர் ஸ்மிரிதி இராணி துவங்கி வைத்துள்ளார். குஜராத் நர்மதா பள்ளத்தாக்கு உரங்கள் மற்றும் ரசாயனங்கள் நிறுவனத்தால் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

- **SBI உயிர் காப்பீட்டு நிறுவனத்தின் புதிய மேலாண் இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக சஞ்சீவ் நவுட்டியால்** நியமிக்கப்பட்டுள்ளார். SBI குழுமத்தில் முக்கியப் பொறுப்பு வகித்த அரிஜித் பாசு இதற்கு முன்னர் மேலாண் இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக பணியாற்றினார். திரு.நாட்டியால் வங்கிப் பணியாளர்களுக்கான இந்தியக் கழகத்தின் சான்றளிக்கப்பட்ட கூட்டிணைவாளர் ஆவார் (Certified Associate).

- இமாச்சலப் பிரதேச மாநில சுகாதாரத்துறை அமைச்சர், குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட தாய்மார்களின் முழுமையான அன்பு என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

- திரிபுரா முதலமைச்சர் பிப்லப் குமார் தேப் பிரதம மந்திரி கவுசல் விகாஸ் யோஜனா திட்டத்தை அகர்தலாவில் தொடங்கி வைத்தார். 1,16,000-க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு 2020ல் பயிற்சி வழங்கும் இலக்கை அடைவதற்கான உறுதியை அவர் அளித்துள்ளார்.

  - **திறன் மேம்பாட்டு இயக்குநரகத்தின் மூலமாக PMKVY திட்டத்தை செயலாக்கும் செய்யும் முதல் வடகிழக்கு மாநிலம் திரிபுரா ஆகும்**

- மூன்றாம் பாலினத்தவர்கள் தங்களுடைய வரி தொடர்பான பரிவர்த்தனைகளுக்காக நிரந்தர கணக்கு எண்ணை (Permanent Account Number – PAN) பெறுபதற்காக அவர்களை தனிநபர் வகை விண்ணப்பதாரராக அங்கீகரிக்கும் வகையில் மத்திய அரசு வருமான வரி விதிகளை (வருமான வரிச் சட்டத்தின் பிரிவுகள் 139A மற்றும் 295 ஆகியவற்றின் கீழ்) திருத்தியுள்ளது.

- இலண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் நாடுகளின் அரசுத் தலைவர்கள் சந்திப்பின் (Commonwealth Heads of Goverment Meeting – CHOGM) இறுதியில் காமன்வெல்த் நாடுகள் 2020-ல் இணைய பாதுகாப்பு மீது செயல் நடவடிக்கைகளை மேற்கொள்ள காமன்வெல்த் சைபர் பிரகடனத்தை (Commonwealth Cyber Declaraton) இயற்றியுள்ளன. இந்தப் பிரகடனமானது சைபர் பாதுகாப்பு ஒத்துழைப்பின் மீதான உலகின் மிகப்பெரிய மற்றும் புவியியல் ரீதியில் மிகவும் பன்மைத்துவமுடைய உலகின் பல்வேறு அரசுகளுக்கிடையேயான அர்ப்பணிப்பாக (inter-governmental commitment) கருதப்படுகிறது.